காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

5—8—72

★

உள்ளே......

மாநில சுயாட்சி ஏமாற்ற அல்ல - ஏற்றம் பெறச் செய்ய! (தலையங்கம்)

...இந்நாட்டில் வாழ்வதற்கு! (அமரர் அண்ணா)

சரித்திரத்தின் சாபக்கேடு! (சிறப்புக் கட்டுரை)

தாயுள்ளம்! (சிறுகதை)

விலை 25 காசு



இரகசியம் ஏதும் இல்லையாமே!

(சீயேயெம்)

ஒருவாறுகத் தனது 26000 கிலோமீட்டர் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு அமெரிக்க அதிபர் நிக்சனும், அவரது துணைவியாரும், உடன் வந்திருந்த செய்தியாளர்களும் வாஷிங்டன் போய்ச் சேர்ந்து விட்டார்கள் இந்தக் கிழமை.

விமான நிலையத்தில் கால்பதித்தவுடனேயேஅவர், சீனுவுக்குச் செல்லும் பயணத்துக்கு ஏற்பாடு செய்யவே அரும்பாடு படவேண்டியிருந்தது என்றும், எனவே சீன விஜயத்தில் யாரும் அதிகம் எதிர்பார்க்கக் கூடாது என்றும் பேசிவிட்டார். தான் மட்டுமல்ல; தன்னுடன் வந்திருந்த செய்தியாளர்களும்தான் என்பதையும் தனியாகச் சுட்டிக் காட்டியிருப்பது சிறப்பான முக்கியத்துவமுடையதாகும்.

தற்போதைய சீன விஜயம் குறித்து நிக்சன் மிக அதிகமான அளவுக்குப் பெருமைபட்டுக்கொள்கிறுர் என்பது நன்கு விளங்குகிறது. வருங்கால குழந்தைகள் நிர்ப்பயமாக வாழுவதற்கு அடிக்கல் நாட்டிவிட்டு வந்துவிட்டேன் என்று எடுத்துக் காட்டுவதன் மூலம், உலகத்துக்கு நிரந்தரமாக ஒரு யுத்த பயம் கிடையாது என்ற தகவலைத் தந்திருப்பதாக அவர் எண்ணுகிருரோ—என்னவோ!

ஆனுல், "வருங்கால உலகம் நிம்மதியாக வாழலாம்" என்று அவர் கருத்துத் தெரிவித்திருப்பதிலிருந்து, இன்றைய உலகம் நிம்மதியாக இல்லையென்பதையும், அந்த நிம்மதியை சீனுதான் குலைத்துக் கொண்டிருக்கிறது என்ற தகவலையும் மறைமுகமாகத் தந்துவிட்டார் என்பதைக் கவனிக்காமலோ கவனித்துச் சுட்டிக் காட்டாமலோ இருக்கமுடியாது.

என்ருலும் ஏழு நாட்களில் மொத்தம் 25 மணி நேரம் சூவுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு, தூதரக உறவற்ற ஒரு வல்லரசு நாட்டுடன் மிகுந்த எச்சரிக்கையாகப் பேச வேண்டியிருந்தது என்ற குறிப்போடு, பின்னர் தயாரிக்கப்பட்ட கூட்டறிக்கையினைக்கூட இறுதியாக்குவதில் தகராறுகள் இருந்தன என்ற சினத்து வதந்திகளையும் மறைத்து விட்டு, ஒருவாறுகக் கூட்டறிக்கை வெளிவந்துவிட்டது.

அறிக்கையினை ஊன்றிக் கவனிக்கும் எவரும், நாம் சென்ற இதழில் குறிப்பிட்டதுபோலவே, 'நிக்சன் போனார்—வந்தார்' என்பதாகத்தானிருக்கிறது என்ற முடிவுக்குத்தான் வரக்கூடும்.

என்ருலும், அறிக்கையிலே மட்டும் சில விஷமத்தனங்களைச்செய்து சித்து விளையாடி இருக்கிருர் என்பதை உலகம் நன்கு உணர்கிறது.

காஷ்மீர் பற்றி அது குறிப்பிட்டிருப்பதும், பாகிஸ்தானின்' எல்லைக்குப் படைகள் திரும்பவேண்டும் என்பதும் அந்தச் சித்து விளையாட்டுக்களிலே சிலவாகத் தோன்றுகிறது.

உலகத்தின் வருங்கால அமைதிக்குச் "செடி நட்டு" விட்டு வந்திருப்பதாகக் கூறிப் பெருமைப்படும் நிக்சன், தங்களது இந்த அறிக்கையின்மூலம், அவர் விரும்பும் அந்த அமைதிக்குக் கேடு விளைவிக்கும் வித்து ஊன்றப்பட்டிருப்பதை அவர் கவனிக்காமலிருக்கும் அளவுக்குப் பாமரத்தனம் உடையவரா என்ன என்ற வினவை எவராவது எழுப்பினுல், அதில் பசையில்லாமலிருக்க முடியாது.

ஐ.நா.அவையிலிருந்து தைவானை வெளியேற்ற ஆதரவு அளித்தபோதே, அமெரிக்கா, தைவானைக் காட்டிக் கொடுத்துவிட்டது என்று உலகத்து அரசியல் விமர்சகர்கள் கருதியதுபோலவே, நடந்துமுடிந்திருக்கிறது இந்த விஜயத்தில்.

சீனுவுக்குச் செல்லப் போகும் தான், சீனு மகிழத்தக்க எதையாவது செய்துவிட வேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில், அது அன்று வெளியேற்றப் பட்டதோ என்று எண்ணுமளவுக்குக் கூட்டறிக்கை இடம் தந்திருக்கிறது.

இந்தச் சீன விஜயம் குறித்து பிரெஞ்சு நாட்டின் முன்னுள் அமைச்சர் மால்ரு என்பவர் குறிப்பிட்டதுபோலவே, சீனுவின் வருங்கால வளவாழ்வுக்கு நிக்சன் நிறைய வாக்குறுதிகளைத் தந்திருக்கிருர். அதே போல் பொருளாதார உதவிகளைச் செய்யவும் ஏற்பாடுகளுக்குச் சம்மதம் அளித்திருக்கிருர்.

உலக அரங்கில்

ஜப்பான், தனது உற்பத்திக்குச் சந்தையாக நம்பிக்கொண்டிருந்த சீனு. இனி தனது இறக்குமதிக்குச் சில கட்டுப்பாடுகள் கொண்டு வந்தால், அதன்மூலம் ஜப்பான் அஞ்சியது நடந்து விடத்தான் செய்யும்.

எனவே. சீன நட்புக்குப் 'பாலம்' அமைத்துக் கொண்டதாகக் கருதும் நிக்சன் விரைவில் ஜப்பானின் 'ஊடலுக்கு'வருந்தியேதீரவேண்டியிருக்கும்.

என்ருலும், 25 மணிநேரப் பேச்சில் அவர் அழைத்துச் சென்ற செய்தியாளர்கள் கூட அனுமதிக்கப் படவில்லை என்ற செய்தியின் மூலம், "எங்கள் பேச்சு வார்த்தைகளில் இரகசியம் எதுவும் இல்லை; இரகசிய ஒப்பந்தமும் இல்லை" என்று கூறி இருப்பது நம்பத்தகுந்ததாக இல்லை.

ஏனென்ருல் இருவரது பேச்சு வார்த்தைகளும் நீண்ட நெடுங் காலத்துக்கு இரகசியமாக இருக்க வேண்டும் என்று முன்கூட்டியே ஒன்றையொன்று கட்டுப்படுத்திக் கொண்டுள்ளன என்பதை நிக்சனே எடுத்துக்காட்டி இருக்கிருர்.

தனது எதிர்காலத்து வளவாழ்வுக்கு பாகிஸ்தான் அதிபர் பூட்டோ, இன்னமும் அமெரிக்காவையே நம்பிக்கொண்டிருக்கிருர் என்பதை, அவரது பேச்சுக்கள் செயல்கள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

பாவம் பூட்டோ! தைவானுக்கு ஏற்பட்ட சதியையாவது இச்சந்தர்ப்பத்தில் அவர் நினைவு கூர்ந்தால், தனது நாட்டு மக்களது வாழ்வுக்கு திட்டம் வகுத்துக் கொள்ள வேண்டியது யார் என்ருவது புட்டோ உணர முடியும்.

மொத்தத்தில் சீன அதிகாரியொருவர் குறிப்பிடுவது போல, நிக்சன் சீனுவுக்குச் சென்று நிரம்பக் கொடுத்து வந்திருக்கிருர்; ஆனுல் பெற்றுக்கொண்டது என்ற வகைக்கு ஒன்றுகூட இல்லை. *

காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 13 அறுமாத சந்தா ரூ. 6-50

மலர் 8 | 5—3—72 | இதழ் 34

மாநில சுயாட்சி ஏமாற்ற அல்ல - ஏற்றம் பெறச் செய்ய!

ஒருகாலத்தில் சக்கரவர்த்தியாக இருந்து இன்றைக்கு ராஜ ரிஷியாக உருமாறி இருக்கும் ராஜகோபாலாச்சாரியார், தமது சுயராஜ்யா இதழில் வெளியிட்டுள்ள ஒரு கட்டுரையின் தமிழாக்கத்தை 'கல்கி' இதழ். சென்ற 27—2—72-இல் "மக்களை ஏமாற்ற மாநில சுயாட்சி கோஷம்" என்ற தலைப்பில் தலையங்கமாக வெளியிட்டிருக்கிறது.

அதில். மாநில சுயாட்சி என்பது கொள்கை அளவில் நல்லவைகளாகவும், நாட்டுக்கு உபயோகமாகவும் இருக்கும் என்பதனை, ஆச்சாரியார் தன்னையறியாமலே ஒப்புக் கொண்டுவிட்டிருக்கிறார்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் என்பது, ஆச்சாரியாரின் சுதந்திராக் கட்சிக்கு உடன்பாடான ஒரு கருத்தாகத்தான் அண்மைக் காலம் வரையில் இருந்து வந்தது. தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்திடம் ஏற்பட்ட காழ்ப்பும், பகையுணர்வுமே ஆச்சாரியார் போன்றவர்களை முரண்பாடான கருத்துக்களைப் படைக்கச் செய்கிறதென்பதை எண்ணிப் பார்த்து வியப்படைய வேண்டியிருக்கிறது.

மாநிலங்களுக்கு அதிகாரங்களைத் தரவல்ல மாநில சுயாட்சி என்பது கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளத் தக்கதுதான் என்பதை, அவரே கூட மறுக்க முடியாமல்தான் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

ஆனால், எந்த நேரத்தில் மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்க வேண்டும் என்பதற்கு அவர் நிர்ணயித்துக் காட்டியிருக்கிற காலகட்டத்தைப் பார்க்கும் போது பாவம், ஆச்சாரியார் என்று நம்மையறியாமலே சொல்லிவிட வேண்டியிருக்கிறது.

> அதிகார பீடத்தில் உள்ளவர்கள் தெய்வ பக்தி நிறைந்தவர்களாகவும் பாபத்தைக் கண்டு அஞ்சிப் புநித வாழ்க்கை நடத்துபவர்களாகவும் இருந்தால் மட்டுமே—
>
> மாநிலங்களுக்கு சுயாட்சி கொடுக்கலாம்—அதிக அதிகாரங்கள் வழங்கலாம்

என்கிற கருத்தை வெளியிட்டிருப்பதன் மூலம், இந்த நாடு இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னோக்கிச் செல்ல வேண்டும் என்ற அவரது உள்ளக் கிடக்கையினைப் புரிந்துகொள்ள முடிகிறது.

ஆச்சாரியார், இன்றுகூட, மிகவும் புநிதம் வாய்ந்தது என்று சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் எழுதிக் காட்டும் தன்மையிலுள்ள அரசியல் சாசனம் அமைக்கப் பட்டபோது—

> இந்திய அரசு மதச் சார்பின்மையுடையவைகளாக இருக்கவேண்டும் என்பதனை அழுத்தந் திருத்தமாக வலியுறுத்தி இருக்கிறது.

அப்படியானால், மதச்சார்பு இன்மை என்று தெளிவாக எடுத்துக் காட்டப்படும் ஒன்றில் கடவுட் சார்பு இன்மையும் தானாகவே ஒட்டிவைக்கப்பட்டிருக்கிறது என்பது வெளிப்படையாகும்.

மதச் சார்பு, கடவுட் சார்பு பற்றிய பிரச்னைகளுக்கு இடமில்லையானால் ஆச்சாரியார் விரும்புகிறபடி ஆட்சிக் கட்டிலில் அமர்வோர் தெய்வ பக்தி உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பது அப்பட்டமான பித்தலாட்டமாகும்.

ஒருவன் தெய்வ பக்தியுடையவனாக இருப்பது என்பதோ, அது அற்றவனாக இருப்பது என்பதோ வேறு விஷயங்கள்; மனிதனது அடிப்படை உரிமைகள் பற்றிய விவகாரங்கள் அவை.

அதனைத்தான் அரசியல் பிரச்னையாக்க வேண்டும் என்று துடிக்கிறார் ஆச்சாரியார் என்பது புலனாகிறது. தெய்வ பக்தியுடையவனாக ஒருவன் இருப்பது என்பதும், பாபத்தைக் கண்டு அஞ்சுவது என்பதும் வேறு வேறு விஷயங்கள். இரண்டுக்கும் தொடர்பு உண்டு என்பதல்லாமல் மதப் பித்தலாட்டங்களேயல்லாமல் வேறு எதுவாகவுமிருக்க முடியாது.

தெய்வ பக்தியுடையவனாக இருப்பவன் எல்லாம் பாப காரியங்களுக்கு அஞ்சுகிறான் என்பதும், தெய்வ நம்பிக்கைக் குறைந்தவன் பாபங்களுக்கு அஞ்சுவதில்லை என்பதும், பத்தாம் பசலிக் காலத்துக் கருத்துக்கள்.

பகலெல்லாம் "பஜனை" பாடிவிட்டு இரவெல்லாம் கள்ள நோட்டுக்களைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள் பலர்; அதுபோல, பகலெல்லாம் சீர்திருத்தக் கருத்துக்களை எடுத்துக் காட்டிவிட்டு, இரவுகளிலே முதியோருக்கு எழுத்தறிவு போதிப்பவர்களாகவும் இருக்கிறார்கள் பலர்,

என்றாலும் இருசாராரிலும் யோக்யர்களும் இருக்கலாம்; அயோக்கியர்களும் இருக்கலாம். எனினும், அவைதான் அரசியலுக்கு நற்சான்று என்றால் அது சரியான பித்தலாட்டம் என்பதை வரையறுத்துக் கூற முடியும்.

ஆகவே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் பெறும் தகுதியானது, பக்திமானாக ஒருவன் இருக்கும்போதுதான் உண்டாகிறது என்பது சரியான "கிழட்டுக்" கருத்து என்பதைத் தவிர வேறேதுமிருக்க முடியாது.

சுயராஜ்யா கட்டுரையில், மேலும் ஆச்சாரியார்,

> "நிதி நிலைமையில் ராஜ்யங்கள் தனித்தியங்கக் கூடிய சக்தி பெற்றிருக்கவில்லை; இன்று அநேகமாக எல்லா வரிகளும் மத்திய சர்க்காருடைய கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றன. ராஜ்யங்களிடம் விற்பனை வரி ஒன்றே முக்கியமாக உள்ளது.
>
> இந்த வரி விகிதத்தைக் கடுமையாக உயர்த்தினாலன்றி, ராஜ்யங்கள் தங்கள் நிதிப் பொறுப்புக்களைத் தாங்களே கவனித்துக் கொள்வது முடியாத காரியம்.
>
> **மத்திய சர்க்காரிடமிருந்து பல விதங்களில் மான்யங்கள் பெற்றே ராஜ்ய அரசுகள் செயல்பட முடிகிறது.**
>
> ஒருபுறம் மத்திய அரசிடம் நிதியுதவி கோரி பிச்சைக் கேட்டுக்கொண்டே, மறுபுறம் எங்களுக்

சரித்திரத்தின் சாபக்கேடு!

(பெ. சீனிவாசன், எம்.ஏ., பி.எல்.,
சட்டமன்றத் துணைத் தலைவர்)

வரலாற்றுப் பாதையில் சரிந்து போன சாம்ராஜ்யச் சக்ரவர்த்திகள், அதிகார உச்சியில் ஏறித் தலைகுப்புற விழுந்த சர்வாதிகாரிகள் நினைவுச் சின்னங்களைப் போல் பலஅபாய அறிவிப்புகளை நிலைநாட்டிச் சென்றிருக்கிறார்கள். ஒருவரின் வீழ்ச்சி அடுத்தவரின் வீழ்ச்சிக்கு எச்சரிக்கையாக இருந்ததில்லை.

போர்த் திறனால், இராஜ தந்திரத்தால் புவிச் சக்ரவர்த்திகளைப் புறமுதுகிட்டோட வைத்து ஐரோப்பாக் கண்டம் முழுவதையும் வென்று காட்டினான் மாவீரன் நெப்போலியன். பெண்மையும் புகழும் செல்வமும் எப்போதும் திகட்டுவதில்லை என்பது மனிதனுக்கே உள்ள பலவீனமான சாபக்கேடு. ஐரோப்பாவின் வட பகுதியில் பனிமூடிக்கிடந்த ரஷ்யா நெப்போலியன் நித்திரையைக் கெடுத்தது. ரஷ்யப் படையெடுப்பு நெப்போலியனின் வீரவரலாற்றில் தோல்வி அத்தியாயங்களை துவக்கி வைத்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பாடம். இருபதாம் நூற்றாண்டுக்கே பயன்படாமல் போயிற்று.

அதே ரஷ்யாவின் மேல் இட்லர் படையெடுத்தான். நெப்போலியன் தோல்வியின் முகத்தை சந்தித்த இடத்திலேயே இட்லரும் அதைச் சந்தித்தான். நெப்போலியனின் தவறு இட்லருக்குப் பாடமாக அமையவில்லை.

வெற்றிக்குமேல் வெற்றி வரும் போது தோல்வியின் அண்மை தெரிய நியாயமில்லை. ஆரம்ப நேரத்தில் எப்படியும் வெற்றி பெறவேண்டும் என்ற ஜீவமரணப் போராட்ட நிலையில் தான் என்ற நிலை மறந்து ஆதரவாக வந்து தோள் கொடுத்தவர் துணையே பெரிதாகத் தோன்றும். சந்தர்ப்பங்கள் உருவாக்கும் சில வெற்றிகளின் திருப்பங்களைப் பார்த்து, ‘தங்கள் சாமர்த்தியமல்லவா’ என்ற துதிபாடிகளின் புகழ் பாடலில் மயங்கி ‘எல்லாம் நானே’ என்ற எண்ணம் எழுவது சரிவின் அடையாளம்.

சிண்டிகேட் தலைவர்களால் வெளியேற்றப்பட்ட நிலையில்அகில இந்தியப் பொறுப்பைக் காப்பாற்றக் கழகத்தின் ஆதரவை அன்று நாடிப் பெற்ற அம்மையார்தான் இன்றும் பதவியில் இருக்கிறார். தேர்தல் வெற்றி காரண காரியங்களை உணரும் சக்தியை, பின்னோக்கிப் பார்க்கும் மனோபாவத்தை மாற்றியிருக்கிறது.

தேர்தல் நேரத்தில் வடநாட்டில் கூட, தி.மு.க. எந்த வகையில் சிறந்த கட்சி, அதனோடு கொண்டுள்ள உறவு எவ்வளவு புனிதமானது’ என்றெல்லாம் பேசிய அம்மையார், இன்று சூழ்நிலையால் சுற்றியிருக்கும் துதிப் பாடல் ஒலியால் தன்னை மறந்த நிலையில் பேசுகிறார்கள். கலைஞர் அவர்கள் சொன்னது போல் 1970க்கும் 72க்கும் இடையில் இவ்வளவு பெரிய வேறுபாடா? ஆனால் சரித்திரம் 1970க்கு முன்பும் இருந்திருக்கிறது. 1972க்குப் பின்னாலும் தொடரப்போகிறது. நெப்போலியனைவிட இட்லரை விட இராஜ தந்திரத்தில், போர்த் திறத்தில் சிறந்தவர்கள் இனி பிறக்கப் போவதில்லை. அவர்கள் வீழ்ந்தார்கள். காரணங்களை நன்றாக விளக்கி நேரு பெருமான் அன்றைய இந்திராவுக்கு அழகாக ஆணித்தரமாக எழுதியிருக்கிறார். திரும்பப் படிக்க நேரமிருக்காது.

தமிழகம் அடுத்த பலிபீடமாம்! அச்சுறுத்துகிறார்கள் மந்திரி பீடத்திலே இருக்கிற சில மோகன குமாரர்கள்.

தமிழகம் தயாராக இருக்கிறது. ஐரோப்பா முழுவதையும் வென்றுப் திருப்தியடையாமல் ரஷ்ய மண்ணில் அடியெடுத்து வைத்து அழிவுக்கு ஆளாகிப் போன நெப்போலியன், இட்லர் சரிதங்களை நெஞ்சத்திலே ஏந்தி நிமிர்ந்து நிற்கிறது தமிழகம். சரித்திரத்தின் சாபக்கேட்டை சாகசமும்சந்தர்ப்பவாதப் புகழும் மாற்றிவிட முடியாது. அளவுக்கு மீறிய புகழுக்கும் செல்வாக்குக்கும் நிச்சயம் ஒரு வீழ்ச்சி (anticlimax) உண்டு. சரித்திர ஏடு காத்திருக்கிறது.

சிறப்புக் கட்டுரை!

★

குச் சுயாட்சி வேண்டும்’ என்பது ஒன்றுக்
கொன்று முரணாகும்.

—என்று எடுத்துக் காட்டி இருக்கிறார்.

மாநிலங்களது நிதி நிலை பற்றிய தெளிந்த மதிப்பீட்டைத் தந்துவிட்டு. மாநிலங்கள் மத்தியிலிருந்து மான்யப் பிச்சை பெற்றே வாழ வேண்டியிருக்கிறது என்பதையும் விளக்கிவிட்டு, இக் கொள்கைகளையப்பட அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்பது முரண்பாடானது என்று விளக்குவது எந்த எந்தவகை அரசியல் என்பது விளங்கவில்லை!

ஆச்சாரியார் குறிப்பிடும் கொடுமைகளைக் களைவதற்காகத்தானே மாநில சுயாட்சிக் கோரிக்கையினைப் பல மாநிலங்கள் கொண்டிருக்கின்றன! இது எப்படி முரண்பாடானதாக முடியும்?

துணைக் கண்டத்தில், ஆச்சாரியார் மட்டுமே புத்திசாலியாக இல்லை என்பதை மட்டுமல்ல, ஆச்சாரியாருடைய கணக்குகள் பொய்யானவை; போலியானவை, பிழையானவை என்பதற்கும் பல சான்றுகள் அண்மைக்காலத்தில் கிடைத்துவிட்டன.

நாட்டின் வளர்ந்துவிட்ட ஒரு இனத்தின் ‘‘எழுச்சி’’ பற்றி இனியாவது ஆச்சாரியாரைப் போன்றவர்கள் எண்ணிப் பார்ப்பது, வருங்கால அமைதிக்கு நல்லதாக இருக்கும்.

அப்போது, ‘‘மாநில சுயாட்சி’ என்பது ஏமாற்ற அல்ல; ஏற்றம் பெறச் செய்ய’’ என்பதை உணர முடியும்.

— திருவாரூர் முத்துராமன்.

காஞ்சீபுரம்

தம்பி! ... இந்நாட்டில் வாழ்வதற்கு!

விரைவிலே நீ, காணஇருக்கும் தமிழ்ப் படம் ஒன்றினை, சென்ற கிழமை நான் காணும் வாய்ப்பினைப் படப் பிடிப்பாளர்கள் ஏற்படுத்தித் தந்தனர்—படம், தம்பி இராஜேந்திரன் நடிக்கும், 'தங்கரத்தினம்'.

து பக்கத்திலே ஒரு காட்சி. இயற்கை எழில் குலுங்கும் சிற்றூரின் மருங்கு, பச்சைப் பட்டாடை அணிந்த நிலமகள்! அவளுடன் வண்ணத்தில் போட்டியிடும் எண்ணத்துடனோ என்னவோ, விண்ணழகி, நீலநிற ஆடையினை நேர்த்தியாக அணிந்துகொண்டிருந்தாள் கனி குலுங்கும் மரங்கள், பூ உதிர்க்கும் செடிகள் கோலமளிக்கும் கொடிகள், வழிநெடுக நாலைந்து கன்னியர், இரட்டை மாட்டு வண்டியிலே செல்கிறார்கள்—ஓட்டுபவள், கள்ளங்கபடமற்ற இளமங்கை!

என்ன அண்ணா! காட்சியிலே என்ன இருக்கிறது, புதுமையாக. வயலையும் வாவியையும், வட்டமிடும் வானம்பாடிகளையும் வளைந்தோடும் அருவிகளையும், இப்போதெல்லாம் எந்தப் படக் காட்சியிலும் காண முடிகிறதே!—என்று கூற எண்ணுகிறாய். உண்மை, தம்பி! உண்மை! கண்களுக்குக் குளிர்ச்சிதரும் வண்ணமிகு, வெளிப்புறக் காட்சிகளை இப்போது, நிரம்பக் காணுகிறோம். ஆனால் என் மனதை ஈர்த்தது, கண்கண்ட காட்சி அல்ல—கருத்தைத் தொடும் வகையிலே, நான் கேட்ட இசை.

கிராமத்துக் கட்டழகி—விளக்கமாகச் சொல்வதானால், சேரிவாழ் சிங்காரி—தன் தோழிகளுடன், வண்டி ஓட்டிக்கொண்டு போகும்போது, சூழ இருந்த இயற்கைச் செல்வத்தைக் கண்ட மகிழ்ச்சி பொங்கிடும் நிலையில், பாடிய பாடல், கூடச் சென்ற தோழிகளைப் பார்த்தல்ல, நாட்டுமக்களைப் பார்த்தே, பாடுவதுபோலிருந்தது.

இன்னொருவர் தயவேதற்கு?
இந்நாட்டில் வாழ்வதற்கு!

என்பது, பாடலின் எடுப்பு! என் செவியிலே. அந்த 'எடுப்பு' இன்னமும் ஒலித்த வண்ணம் இருக்கிறது.

நம் நாட்டின் இயற்கை வளம், மக்களின் உழைப்புத் திறம், அறிவு மேம்பாடு, இவைபற்றி எல்லாம் அந்தப் பாடலிலே, அழகான 'அடிகள்' உள்ளன; பொருட்சுவை இசை இனிமையுடன் குழைந்து வருகிறது; எனினும், 'எடுப்பு' இருக்கிறதே, அது ஒரு பாடலுக்காக மட்டுமல்ல, நமது நாட்டு மக்கள் எப்போதும் எண்ணிப் பார்த்திட ஏற்றம் பெற்றிடத் தூண்டிடும் முறையிலே அமைந்திருக்கிறது.

இக்கட்டுரை 28-8-'60-இல் எழுதப் பட்டது. "தனிநாடு" பற்றி சில இடங்களில் குறிப்பிடப்பட்டாலும், மாநில சுயாட்சிக் கோரிக்கையின் முக்கியத்துவத்தை உணர்த்திக்காட்டப் பயன்படுகிறது. எனவேதான் "மறுபதிப்பு"ச் செய்திருக்கிறோம். பிரிவினையைத் தூண்டுவதற்காக அல்ல!

இன்னொருவர் தயவேதற்கு?
இந்நாட்டில் வாழ்வதற்கு!

— இது பாடலின் எடுப்பாக அமைந்திருந்தது. என்றாலும், தம்பி! இச்சகம் பேசியோ, இளித்துக்கிடந்தோ, ஏவல் பல

புரிந்தோ, எடுபிடி ஆகியோ இருந்தால் மட்டுமே, பிழைக்க முடியும் என்று எண்ணிக் கிடக்கிறார்களே, சிலர், அவர்கள் ஒருநாள் ஒரு பொழுதாகிலும், தம்மைத் தாமே கேட்டுக்கொள்ளவேண்டும்.

இன்னொருவர் தயவெதற்கு?
இந்நாட்டில் வாழ்வதற்கு!

இன்னொருவர் தயவை மட்டும் தேடியா, தாள் தொட்டுக் கிடந்தன்றோ வாழமுடியும் என்று, எண்ணிக் கிடக்கின்றனர், இருப்பதை மறந்துவிட்ட இயல்பினர்.

ஏதோ இந்நாடு, பாலைவனமும் பாழ்வெளியும், காடு மேடும், மட்டுமே கொண்டதாக இருப்பது போலவும், இங்கு, விதைத்தால் முளைக்காது, வெட்டினால் ஊற்றுச் சுரக்காது, என்று கூறத்தக்க நிலை இருப்பது போலவும், எதிரிப் படைகள் நாற்புறமும் சூழ்ந்துகொண்டு, தாக்கியபடி இருப்பது போலவும், ஓர் மனமயக்கத்தைத் தாமாக ஏற்படுத்திக்கொண்டு, ஓர் 'மேலிடம்' நாடி, அவர் தயவினைத் தேடிப்பெற்று மட்டுமே, வாழ்வினைச் செம்மையாக்கிக்கொள்ள முடியும் என்று எண்ணி, அடிமை மனப்பான்மையினராகி அவதியுறுவதுடன், அந்தப் 'பிச்சைப் பிழைப்பை' இச்சையுடன் ஏற்றுக்கொள்வதுதான் அறிவுடைமை; மறுப்பது மடைமை!—என்றெல்லாம் பேசியும் வருகின்றனரே, அவர்களின் நினைப்புத்தான் வந்தது, பாடலின் எடுப்பைக் கேட்டதும்.

சோம்பித் திரிந்திடாமல், சுரண்டிக்கெடுக்காமல் உழைத்தால் அனைவரும், உண்டு மகிழ்ந்திருக்கத் தக்க அளவு, வளம் கொண்டதாகவே நம் நாடு இருந்திடக் காண்கிறோம்.

கோடிகோடியாகப் பொருளைக் கொட்டிப், புதுத் திட்டங்களைத் தீட்டி நடத்தி, பெருஞ்செல்வத்தை உற்பத்திசெய்து குவித்திடுவோம்—என்று இன்று கூறுகின்றனர். தம்பி! நான் அந்தத் தனிமுயற்சியை மனதில் வைத்துக்கொண்டுகூட அல்ல, உழைப்பைக் குறைத்துப் பொருளைப் பெருக்கித் தரத்தக்க விஞ்ஞானக் கருவிகள், கிடைக்காதுபோயினும்கூட, அறிவுத் தெளிவுடன் கூடிய உழைப்பின்மூலம் மட்டுமே, பெறத்தக்க வளமேகூட, இந்நாட்டு மக்களை, நிம்மதியாக வாழ்ந்திடச் செய்திடும் வகையிலும், அளவிலும் இருப்பதைக் குறிப்பிடுகிறேன். இது இல்லையே! இதற்கு என்ன செய்வோம்? என்று ஏங்கித் தவித்திடும் நிலையில் நாம் இல்லை—நமது நாடு, போதுமான அளவு, வளம் பெற்றிருக்கிறது. அதனை அறிந்து அனைவரும் கபடமற்று உழைத்துக் கயமைத் தனத்தைத் தலைகாட்ட ஒட்டாது வெட்டிச் சாய்த்திட்டால், இன்னொருவர் தயவு எதற்கு? இந்நாட்டில் வாழ்வதற்கு? என்று இசைபாடி மட்டுமல்ல, இசைபட வாழ்ந்திடவும் முடியும்.

புத்தம் புதுக்கருவிகள், புதுப்புதுத் திட்டங்கள், இங்கு நிம்மதியான வாழ்க்கையை மட்டுமல்ல, எங்கும் பொன் கொழிக்கும் நிலையை ஏற்படுத்தித்தரும், என்று, திட்டம் தீட்டுவோர் அறிவிக்கின்றனர். அந்த நோக்கத்துடனேயே, இரண்டு திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறோம், இப்போது மூன்றாவது திட்டம் கருவில் உருவாகி வருகிறது என்றும், கூறிக் களிப்பூட்டுகின்றனர். ஆனால், கவனித்திருப்பாயே, தம்பி! இந்தக் கிழமை, நேரு பண்டிதர் பேசியிருப்பதை.

இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களாலும் பெருகிய செல்வம், எங்கே சென்று தங்கிவிட்டிருக்கிறது, என்பதைக் கண்டறிய வேண்டும். அதற்காக ஒரு தனிக்குழு அமைத்திட வேண்டும்.

பத்து ஆண்டுகள், பாடுபட்டதிலே கிடைத்த பலன், எங்கே இருக்கிறது என்பது, கண்டுபிடிக்கப் படவேண்டியதாக, தனிக்குழு அமைத்துக் கண்டு பிடிக்கப்பட வேண்டியதாக, இருக்கிறது.

திட்டத்தின் வெற்றிக்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்! தேடுகிறார்கள், பலன் எங்கே என்று!!

நான், தம்பி! இப்போது அந்த திட்டங்களை மனதிலே கொண்டு அல்ல, இயற்கை நமக்கு அளித்துள்ள செல்வத்தைமட்டுமே மனதிலே கொண்டுதான், கூறுகிறேன், ஒழுங்கான முறையில், ஒருவரை ஒருவர் அழித்திடும் கெடுமதியின்றி, அனைவரும், உழைத்தால், எவரும் இல்லாமை எனும் நோயால் பீடிக்கப்படாமல், நிம்மதியாக வாழ்ந்திட முடியும்.

ஃ ஃ ஃ

உலகிலே, பலநாடுகள் உள்ளன-சில நாடுகளிலே சில பகுதிகளும் உள்ளன—இன்னொருவர் தயவு இருந்தால் மட்டுமே வாழ்ந்திட முடியும் என்று கூறத்தக்க நிலையில், வளம் குறைந்த நாடுகள் உள்ளன. குடிவளம் அற்ற நாடுகள் உள்ளன. இன்றும் வேட்டையாடுதல், மீன் பிடித்தல் இவைகளை மட்டுமே வாழ்க்கைக்கு வழிகளாகக் கொண்ட நாடுகள் உள்ளன. சில இடங்கள் உள்ளன—கதிரவனை வருடத்தில் மூன்று மாதங்கள் மட்டுமே காணமுடியும்! சில நாடுகளிலே, அடிக்கடி, கடல் கொதித்தெழுந்து, படை எடுத்து அழிவை உண்டாக்கிவிடும்!! சில நாடுகளிலே, எப்போதும் மூடுபனி. புல்பூண்டுகூட முளைத்திட முடியாத நிலையிலே பனிப்பாறைகள் நிரம்பிக் கிடக்கும் இடங்களும் உள்ளன. இந்நாடு பல ஆயிரம் ஆண்டுகளாகவே, இயற்கையின் பேருதவியைப் பெருமளவு பெற்றுத் திகழ்ந்து வந்திருக்கிறது. அந்த வளத்தை, பழம்பெரும் புலவர்களின் பாக்களில் காண்கிறோம். அவர்களின் காலத்திலே, அற்புதம் செய்தளிக்கும் கருவிகள் இல்லை; உண்மை, ஆயினும் வளம் கொஞ்சிக் கிடந்தது, துள்ளிடும் வாளை கண்டனர், புள்ளிமான் கோலம் கண்டனர்; கிள்ளைமொழி கேட்டு இன்புற்றனர்; சந்தன மணம் பெற்று மகிழ்ந்தனர்; கடலிடை முத்தும், கைத்திறனுள்ளோர் செய்தளிக்கும் அணிமணியும் கண்டனர்; பழமுதிர்ச் சோலைகள், பாங்குநிறை வயல்கள், செங்கரும்புக் கழனிகள், என்ற இன்னோரன்ன வளம் கண்டு பாடினரேயன்றி, வெடித்துக் கிடக்கும் வயல்கள், கொதித்துக் குழம்பிடும் கும்பிகள், நெருப்பைக் கக்கிடும் எரிமலைகள், அழிவினை ஏவிடும் நிலநடுக்கங்கள்—எனும் கொடுமைகளைக் கண்டார்களில்லை. பன்னெடுங் காலமாகவே, இன்னொருவர் தயவு எதற்கு, இந்நாட்டில் வாழ்வதற்கு? என்று பண்பாடியே, வாழ்ந்தனர், தமிழர்.

உண்டிக்கும் உடுத்துவதற்குங்கூட, வழிவகையற்றுப்போய் மற்றவர்களை அண்டிப் பிழைத்திட வேண்டிய, அல்லல் நிரம்பிய நிலையில், நாடுகள் இருந்தன; இருக்கின்றன; பிச்சைப் பிழைப்பு நம் நாட்டு மக்களை, முன்பு, தீண்டினதில்லை. நாடு மட்டுமா, தனி மனிதனே, பிச்சை எடுத்துத்தான் உயிர் வாழ வேண்டும் என்ற நிலை இருக்குமானால், அது எத்துணை வெறுக்கத் தக்கது என்று நமது ஆன்றோர் கருதினர் என்பதற்குச் சான்றுகளைத் தேடி அலைவானேன்.

இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்
பரந்து கெடுக உலகியற்றியான்

என்றன்றோ, வள்ளுவப் பெருந்தகை கூறினார்.

அப்படிப்பட்ட நாடு, இன்று எதிலாகிலும், தன்னிறைவு பெற்று, இருந்திடக் காண்கிறோமா?

எதிலாகிலும், தன்னிச்சைப்படி நடந்திடும் உரிமை பெற்றிருக்கிறதா, நாடு?

இல்லை! இல்லை! என்பதை, நாம் எடுத்துக் காட்டும், ஆதாரங்களைக் கூடத் தள்ளிவிடட்டும், தம்பி! ஒவ்வொன்றுக்கும், நமது அமைச்சர்கள் அளிக்கிறார்களே, பதில்கள், அவைகளைக் கவனித்தாலே, புரிகிறதல்லவா!!

நம் நாட்டிலே உழவுமுறை எங்ஙனம் இருத்தல் வேண்டும் என்பதிலிருந்து, உரையாடுவது எம்மொழியில், என்பது வரையில், இன்னொருவர் தயவுகூட அல்ல, இன்னொருவரின் கட்டளையை எதிர் பார்த்தல்லவா, நடந்துகொள்ளவேண்டி இருக்கிறது.

துறைமுகங்கள் உள்ளன இங்கே; தூர்ந்துபோன நிலையில்; அவைகளைப் பழுது பார்க்கலாமா ஆழப்படுத்தலாமா, என்று யோசிக்கக்கூட, நமக்கு, அங்கிருந்து 'நிபுணர்கள்' தேவைப்படும் நிலையல்லவா, காண்கிறோம்.

தூத்துக்குடித் துறைமுகத்தைப் பற்றிய சோகக் கதைதான், தெரியுமே, தம்பி! உனக்கு. ஓட்டு வேட்டைக்குச் செல்லும்போது, அமைச்சர்கள் பேசும் பேச்சுக்களைக் கவனித்தால், அடே! அப்பா! ஒரே மாதத்திலே, அவர்களே, தூத்துக்குடித் துறைமுகத்தை விரிவுபடுத்தி, சேது சமுத்திர திட்டத்தைச் செயல்படுத்தி, கப்பலே ஓட்டிவிடுவார்கள் என்று எண்ணிடத் தோன்றும்—அவ்வளவு கனிவு, குழைவு, தாராளம், வீரம், விவேகம், ததும்புகின்றன. பொங்கி வழியும் அந்த ஆர்வம், பெட்டியில் விழுந்ததை எண்ணிப் பார்த்ததும், இருக்குமிடம் தெரியாமல் வரண்டுபோயே விடுகிறது. ஏன்? இன்னொருவர் கட்டளைக்குக் காத்துக் கிடக்கவேண்டி இருப்பதால்! இதைச் சொன்னால், இப்போதெல்லாம், நமது மந்திரிமார்களுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வருகிறது. கோபம் பிறந்து என்ன பலன்? எதிர்க் கட்சிகளைத் தாக்கத்தான், அந்தக் கோபம் பயன்படுமேயன்றி, டில்லிப் பட்டினத்தருகே கூடச் செல்லும், வலிவு இல்லையே அதற்கு!! ஏன்? எதற்கும் டில்லியின் தயவை நாடிக் கிடக்கவேண்டிய, இழி நிலையை, இவர்களாக ஏற்படுத்திக்கொண்டதனால்! இவர்களின், நெஞ்சுக்கு உரம் ஊட்ட, அறிவுக்குத் தெளிவு கிடைக்கத்தான், நமது கழகம்,

இன்னொருவர் தயவெதற்கு?
இந்நாட்டில் வாழ்வதற்கு!

என்று பண்பாடியபடி இருக்கிறது.

தம்பி! சில நாடுகள், இயற்கை வளமற்று, தொழில் திறனுள்ள மக்களற்று இருப்பதால், பேரரசு ஒன்றினுக்கு உட்பட்டு, அடங்கிக் கிடந்து, வாழ்க்கையை நடத்தித் தீரவேண்டியவைகளாகிவிடுகின்றன. வேறு சில நாடுகள், வளம் இருந்தும், அதனைத் தக்க முறையில், பயன் படுத்திக்கொள்ளும் உரிமை பெறாததாலோ, உரிமை பறிக்கப்பட்டுப் போய்விடுவதாலோ, அடிமைக் கோலம் பூண்டு, பேரரசு இடும் பிச்சையை உண்டு வாழவேண்டி நேரிட்டுவிடுகிறது. நம் நாட்டு நிலை, மிக வியப்பான தோன்றும். நம் நாட்டு வளம் ஒரு பேரரசுக்கு வண்ணமளிக்கவும், நம் நாட்டுத் தொழில் திறமை, வேறோர் இடத்துக்கு வலிவும் பொலிவும் தேடித் தரவும், பயன்படுத்தப்பட்டு வருகிறது.

நம் நாட்டு இரும்பு, நமக்கு இன்னமும் பயன்படவில்லை; நாம் நாட்டுக்கோ, வேற்றிடத்து இரும்பு வருகிறது; அது மட்டுமல்ல வேடிக்கை, அந்த வேற்றிடத்து இரும்பை வெட்டி எடுக்கவும், அதற்கான திட்டமிட்டு செயல்படவும், நம் நாட்டவர் வேற்றிடம் செல்கிறார்கள்!!



நாட்டிலே, காவிரிக்கரையில் எண்ணெய் கிடைக்கும் என்கிறார்கள் நிபுணர்கள்.

நம் நாட்டுக்கு இப்போது எண்ணெய், வேற்றிடத்திலிருந்து வருகிறது.

அது மட்டுமல்ல, வேற்றிடத்தில் உள்ள எண்ணெய்த் தொழிலிடங்களில், நம்நாட்டு உழைப்பாளிகளும், நிபுணர்களும், வேலை செய்து வருகிறார்கள்.

சந்தனத்தை அரைத்தெடுத்துக் கொடுக்கிறோம்—சமயத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்தவன்—மார்பிலே பூசிக்கொள்கிறான், மகிழ்ச்சியுடன்; அரைத்ததால் கையிலே வந்துற்ற 'களுக்கு'க்காக ஈரக் களிமண்ணை அப்பிக் கொண்டு, நாம் வேதனைப் படுகிறோம்.

என்ன செய்யலாம்! நாம் வந்த வழி அப்படி!!—என்று பேசிப் புலம்புவர், வழி அறியாதார். அது போலன்றோ, ஆளவந்தார்களும் பேசுகின்றனர், என்ன செய்வது? நாம், டில்லியின் தயவை எதிர் பார்த்துத்தான் வாழவேண்டி இருக்கிறது, என்று. என்ன இல்லை இங்கே? ஏன் கை ஏந்திக் கஷ்டப்படுகிறீர்கள்? என்று கேட்டுவிட்டாலோ, உருட்டுகிறார்கள், மிரட்டுகிறார்கள், தம்பி! குத்திக் குடலெடுக்கிறார்கள், கொன்றே போட்டுவிடுகிறார்கள்.

உண்மையிலேயே இந்த நாடு, இன்னொருவர் தயவை நாடினால் மட்டுமே, வாழ முடியும், என்ற விதத்திலே, இருக்குமானால், நீயும் நானும், நமது பக்கம் திரண்டு நிற்கும் நற்பண்பாளரும், ஏன், தனி நாடு, தனி அரசு என்று பேசப்போகிறோம்! நமக்கு என்ன, ஆளவந்தார்களின் அருவருப்பைத் தேடிக் கொள்வதிலே, இலாபமா? சுவையா? தலையாட்டிகளெல்லாம் தர்பாரில் இடம் பெற்றிருப்பதைப்

பார்க்கிறோம்; எங்கோ கிடந்ததுகள் சாமரம் வீசிப் பங்காளிகளாகிவிடுவதைக் காண்கிறோம்; எதிர்த்துப் பார்த்தோம், பலன் இல்லை; இனி எடுபிடியாகிப் பார்ப்போம், பலன் கேட்போம், என்ற முறையிலே, ஓங்காரச் கூச்சலிட்டு ஒரு காலத்தில் உலவி வந்ததுகளெல்லாம், இன்று புகழ் 'ரீங்காரம்' செய்து, வட்டமிட்டுக் கொண்டிருக்கக் காண்கிறோம்; எனினும், ஆளவந்தாரின் போக்கினை எதிர்த்து இன்னல் வந்துற்றால் ஏற்றுக்கொள்கிறோம். என்ன காரணம்? நமது உள்ளத்தில் ஆட்சி செய்யும் உணர்வு; நம்மை உந்திக்கொண்டிருக்கிறது.

இன்னொருவர் தயவேதற்கு?
இந்நாட்டில் வாழ்வதற்கு,

என்ற பண், செவியில் கேட்டபடி இருக்கிறது. இந்நாட்டு அருவியின் சல சல ஒலியிலும், செந்நெல் மணிகளின் கல கல ஒலியிலும், இந்தப் பண்தான் கேட்கிறோம். ஓங்கி உயர்ந்த மலைகளும், தேனினைச் சொரிந்திடும் தருக்களும், நமக்கு இந்தப் பண்ணினைத்தான், இசைத்தபடி உள்ளன. அதன் வயப்பட்டுவிட்டோம், மற்ற எதுவும், நம்மை மயக்கிடாது; எந்த எதிர்ப்பும் நமது எண்ணத்தை மாய்த்திடாது; உடலைச் சாய்த்திடலாம்; இருட்டு நேரம். முரட்டு ஆள், கூர்மையான கத்தி, நேர்மை மறக்கும் அதிகாரி இருந்தால் போதும் அதற்கு. ஆனால், எண்ணம், என்றும் இறந்துபடாது! காணும் காட்சிகள், கேட்டிடும் இசை, எல்லாம், அந்த எண்ணத்தை மேலும் வலிவுள்ளதாக்கும்!!

தம்பி! உடன் பிறந்த தங்கைமார் கூடி, நிலாச்சோறு செய்து உண்டு களிப்பர்—கண்டிருக்கக் கூடும். பல்வேறு இல்லங்களின் செல்வங்கள் ஒரு இடத்தில் இருந்து, ஒன்றாகச் சமைத்து. ஒருசேர இருந்து உண்டு. ஆடிப்பாடி மகிழ்வர். எனினும், அந்த 'விளையாட்டு' முடிந்ததும், அவரவர் இல்லம் செல்வர்; பிறகு, உண்பதும் உறங்குவதும் அவரவர் இல்லத்திலேயே.

அதுபோல், வேடிக்கைக்காக அல்ல, காரணத்தோடு, ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காக, பல நாட்டவர், பல இனத்தினர் ஒரு இடத்திலிருந்து, ஒன்றுபட்டுக் காரியமாற்றலாம்—காரியமாற்ற வேண்டி நேரிடும். ஆனால் அந்தக் குறிப்பிட்ட காரியம் குறைவின்றி நடந்தேறிய பிறகு, ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு இனமும், தத்தமது எல்லை நின்று, உழைத்து, உயர்ந்து, உயர்வினை உலகுக்கு விரும்பி அளித்து, உலகப் பொது நலனை வளர்த்திடவே முனைதல் வேண்டும்.

உலகே ஒரு பெரும் நாடு ஆகி—எல்லைக் கோடுகள் அழிக்கப்பட்டு—இன இயல்புகள் நீக்கப்பட்டு—யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்பது நடைமுறைக்குக் கொண்டுவரப்படும், நன்னாள் வருமெனின் எவர் குறுக்கே நிற்பர்! ஜெர்மனி, ஜெர்மனி என்ற உணர்வை இழந்து, இத்தாலி தன் தனிப் பெயரை விட்டுக் கொடுத்து, பிரான்சு தன்பண்பு தனியானது என்று பேசுவதை விட்டொழித்து, அதுபோன்றே, அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, இரஷியா ஆகிய எல்லா நாடுகளும், தத்தமது எல்லைகள், இயல்புகள், அரசு முறைகள், வளமூட்டும் வாய்ப்புகள் அனைத்தையும் 'தியாகம்' செய்து, 'ஒரே உலகு' ஆகிவிடத் திட்டமிட்டாலும், நாங்கள் மட்டும், 'திராவிடம்' தனி நாடுதான் என்ற திட்டத்தை விடமாட்டோம், என்று, எவரும் கூறத் துணியார். ஆனால், 'ஒரே உலகு' என்பதே உயர்ந்த இலட்சியம், எனவே உனக்கென ஒரு நாடு, ஒருஅரசு, வேண்டுமென்று கிளர்ச்சி நடத்தாதே. அது குறுகிய மனப்போக்கு என்று பேசுவது பேரறிவினைக்காட்டுதலுமாகாது, நேர்மையுமாகாது.

'தேசியம்' என்பதுகூட, ஒரு போலித் தத்துவந்தான்! மனிதகுலம் ஒன்றேயன்றி, அதிலே, மஞ்சள், கருப்பு, வெள்ளை மாநிறம் என்றெல்லாம் குறிப்பிட்டு இது என் நாடு, இது என் அரசு, என்று வாதாடுவது பேதைமை, என்றுகூடப் பெரியவர்கள் பேசுகிறார்கள்—சுவை இருக்கிறது பேச்சில்; மறுத்தால் சூடுகூடப் பிறந்துவிடுகிறது; ஆனால் செயல்முறை, எங்ஙனம் இருக்கிறது என்று கவனிக்கும்போதுதான், அந்தப் பெரியவர்கள் பேசுவது, மற்றவர்கள் கேட்டுத் தம்முடைய உரிமையை இழந்திடத் தூண்டவேயொழிய தமது உரிமையை விட்டுக்கொடுக்க அல்ல என்பது விளக்கமாகத் தெரிகிறது.

ஃ ஃ ஃ

ஓ, ஹென்ரி சுவைமிகு சிறுகதைகள் பல எழுதிப் புகழ் ஈட்டிய, அமெரிக்க எழுத்தாளர். கதைகளில் சுவை என்றால், சொல்லடுக்கால், கட்டுக்கோப்பு முறையால் கிடைத்திடும் சுவை மட்டுமல்ல, கதையிலே இடம்பெற்று, படிப்போரின் நெஞ்சைத் தொட்டிடும் கருத்தால் கிடைத்திடும் தரும் சுவை.

ஃ ஃ ஃ

ஒரு உணவு விடுதி! மிகப்பெரியது, புகழ்வாய்ந்தது. எப்போதும் இங்கு ஒரே ஆரவாரம், கூட்டம், குதூகலம். எங்கெங்கிருந்தெல்லாமோ, வருகிறார்கள் இந்த உணவு விடுதிக்கு.

கூட்டத்திலே சேராமல், ஆனால் அனைவரையும் கூர்ந்து கவனித்தபடி, ஒருவன், இருக்கிறான்—அவன் ஒரு சிந்தனையாளன். அரசியல், பொருளியல், மன இயல், இவைகளைப்பற்றி எல்லாம் நிரம்பத் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆர்வம் அவனுக்கு. இந்த விடுதியிலே பலர் வருகிறார்கள். பல விஷயங்களைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைக்கும் என்பதற்காகவே வந்திருக்கிறான்.

விந்தையான மனிதர்கள், வேடிக்கையானஇடம்! என்று எண்ணியபடி அவன் உட்கார்ந்திருக்கிறான். நடமாடும் விந்தை என்று சொல்லத்தக்க விதத்தில், ஒருவன், உள்ளே நுழைந்து, ஒரு அதிர்வேட்டுச் சிரிப்பை வீசிவிட்டு, உட்கார இடம் தேடி, ஒதுக்குப்புறமான இடத்தில், தனியாக உட்கார்ந்திருக்கும் சிந்தனையாளனைப் பார்க்கிறான். என்ன எண்ணிக்கொண்டானோ, தெரியவில்லை, நேராக, அதே இடம் வந்து, அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொள்கிறான்.

மயக்கும் பார்வை! இனிக்கும் பேச்சு! அந்த விந்தை மனிதனுக்கு.

"தாங்கள் எந்த ஊரோ?" என்று கேட்டான், சிந்தனையாளன்.

"நானா? நான், நார்வே! அல்லது பாலஸ்தீன்! பாரிஸ்!" என்று ஏதாவது பதில் சொல்லுவான் என்பது. சிந்தனையாளன நினைப்பு. விந்தை மனிதனோ, உடனே பதில் கூறவில்லை. ஏற இறங்கப் பார்த்துவிட்டு. ஏளனம், பச்சாதாபம், வியப்பு, எல்லாம்

கலந்த ஒரு புன்னகையைக் காட்டியபடி, "நானு? எந்த ஊர் என்ரு கேட்கிருய்! நான் என்ன சொல்ல! என் ஊர், உலகம்!! இப்போது பிங் நகரிலிருந்து புறப்பட்டு வருகிறேன்; டமாஸ்கஸ் நகர வியாபாரி ஒருவருக்குக் காஷ்மீர் கம்பளம் தேவை என்று வெனிஸ் நண்பன் கூறக்கேட்டு, இன்றிரவு பாக்தாத் கிளம்புகிறேன், அந்த வியாபாரியைக் கண்டு பேச!" என்று பதிலளித்தான்.

ஊர் எது என்று கேட்ட உடன் மளமளவென்று உலகையே ஒரு சுற்றுச் சுற்றி வருகிருனே, என்று ஆச்சரியம், சிந்தனையாளனுக்கு.

"உலகம், எல்லோருக்கும் பொதுவானது. என்றுலும், அவரவர்களுக்கு என்று ஒரு நாடு, ஒரு ஊர், உண்டு அல்லவா?" என்று கேட்டான் சிந்தனையாளன்.

"இளைஞனே! பொதுவாகப் பலருக்கும் இருக்கும் பித்தம் உனக்கும் இருக்கிறது. என் நாடு, என் ஊர், என்பது, அர்த்தமற்ற பேச்சு!! நாட்டின்மீது பற்று வைப்பது என்ற தத்துவமே, போலி—சொத்தை. மண்ணும் விண்ணும், மரமும் மலரும் குதலைமொழிக் குழந்தையரும் குழல்மொழிக் குமரிகளும். எல்லா இடத்திலும், உலகமெங்கும் உண்டு! இதிலே ஒரு குறிப்பிட்ட எல்லையை, நாமாக வகுத்துக்கொண்டு, இது எனது நாடு, இதற்கு உலகிலே எங்கும் இல்லை ஈடு, என்று பேசுவது, பேதைமை. ஒரு குறிப்பிட்ட இடத்தின்மீது பற்று இருப்பதாகப் பேசுவதும் பொருத்தமற்றது. எனக்கு இமயமலை பனிமூடி இருக்கும் காட்சியும், இலண்டன் மாநகரம் மூடுபனியில் மூழ்கிக் கிடப்பதும், நைல் நதியின் நேர்த்தியும், நேப்பிள்ஸ் நகர வசீகரமும், பெர்லின்நகரத் தொழிற்சாலையும், பிரான்சு நாட்டு மதுவகையும், மணிபுரி நடனமும் மாட்ரிட் நகர மாட்டுச் சண்டையும், எல்லாமே பிடிக்கும்; எல்லாம் என்னுடையவை என்ற உணர்ச்சிதான் எனக்கு-என் நாடு! அதிலே என் ஊர்! அதிலே என் தெரு! அதிலே நான் பிறந்த வீடு! நான் விளையாடிய மண்மேடு! அங்கு நான் கலைத் தெறிந்த குருவிக்கூடு! — என்றெல்லாம் பேசுவது கிடையாடு. நான் மனிதன், இந்த நாட்டுக்காரன்—அந்த நாட்டுக்காரன் என்று, என்னையே நான் மதிப்புக் குறைவாக்கிக் கொள்ளமாட்டேன். என் நாடு உலகம்!! மசூதியும் மாதாகோயிலும், தேரும் திருவிழாவும், உண்டு! இதிலே இதுதான் என்னுடையது, இது என்னுடையது அல்ல என்ற பேத உணர்ச்சி எனக்குக் கிடையாது. நான் சில வேளைகளில், சில இடங்களில் தங்குவேன்—ஆனுல் அதிலே இன்ன இடம், என் இடம் என்று கூறி, மற்ற இடங்களை இழந்துவிடுவேனு! மதியற்றவனல்லவா, அப்படிச் செய்வான். நான் அரபிய பாலைவனத்திலே ஒட்டகத்தின் மீது அமர்ந்து செல்வேன், கேரளத்திலே படகேறிச் செல்வேன், டார்ட்டாரியில் குதிரை! இலண்டனில் விமானம்! இரஷியாவில், ரயில்!!—இப்படி!! ஆனுல், இதிலே இது தான் என் நாடு, மற்றவை மற்ற எவரெவருக்கோ, என்று பேசும், பஞ்சப்புத்திக்காரனல்ல நான்! எனக்கு, உலகம், உறைவிடம்! உலகநாதன் என்று என்னை அழைக்கலாம்."

சிந்தனையாளன், வியப்பிலேஅமிழ்ந்தேபோனுன்.

நாடு, நாட்டுப்பற்று, நாட்டுவிடுதலை, அதற்கான போர், அதிலே தியாகங்கள், வீர வரலாறுகள், இவைகளை எல்லாம் படித்துப் படித்து, நெஞ்சு நெக்குருகி இருக்கிருன்—இதோ ஒருவன், தன்னை உலகநாதன் என்று கூறிக்கொள்கிருன்—நாட்டுப் பற்று என்று பேசுவதே சிறுபிள்ளைத்தனம் என்று கேலி செய்கிருன்—இவனல்லவா, தலைசிறந்த தத்துவவாதி—நாட்டுப் பற்று எனும் பாசத்தைக்கூடக் கடந்தவன்!—என்று எண்ணி வியந்தான்.

"என் நாடு இங்கிலாந்து என்று கூறிவிட்டால்; உனக்குக் கரித்துண்டு மட்டும்தான் சொந்தமாகும். ஆப்பிரிக்காவிலே உள்ள வைரம், உனக்கு இருக்காது—தமிழ்நாட்டு முத்து உனக்கல்ல, ஆப்கன் நாட்டு பழவகை உனக்கில்லை......" என்று விந்தை மனிதன் கூறக்கேட்டு, சிந்தனையாளன், இவனே 'இலட்சிய புருஷன்'—இவன் கூறுவதே உண்மையான தத்துவம், தேசியம் என்பதுகூடச் சொத்தை வாதம், நாமும் 'உலகநாதன்' ஆகிவிட வேண்டும், குறுகிய மனப்

உருவகம் :

கரிந்த திரி

ஒரு மனோரஞ்சித மலர்...

என் தோட்டத்தில் மணம் விசியது அந்த மலர்......

ஆயிரம் வருஷங்களுக்கு ஒரு முறையே புஷ்பிக்கும் அந்த மலர்......

காலக் கலைஞனின் அபூர்வ சிருஷ்டி...

என் உணர்ச்சி நரம்புகளை மெல்ல நெருடி காதல் ராகம் எழுப்பிய அந்த மலர்......

ஓ! மனித பொம்மைகளை விதிச் சாவி தானே இயக்குகிறது.

என்னை நோக்கிப் பாய்ந்தது அந்த நதி; தடம் மாற்றி அனுப்பியது விதி.

கனவுப் பூக்கள் குலுங்கிய மரம் பேரிடியால் கருகியது.

அறுந்த காற்ருடிமனம், புயலில்...எங்கோ ...எங்கெங்கோ...வழி தெரியாமல் அலைகிறது.

பிடித்து நிறுத்த சிறு நூலும் இல்லை

நெஞ்சத் திரையில் நினைவுப் படவோட்டம்

கண்ணீர்ச்சிலையால் மறைக்க முயல்கிறேன்.

பெருமூச்சுக் கனலால் எரிக்க முயற்சிக்கிறேன்.

நெஞ்சின் அலைகள் துயில்வதேது?

கவலைப் புற்றுநோய் என் இதயத்தை மெல்லுகிறது.

துன்பச் சிறையில் நானோர் ஆயுள் கைதி.

என் வாழ்க்கை ரோஜா இதழ்கள் உதிர்ந்து போன வெறும் கூரிய முள்.

பிரகாசமான ஜுவாலை; அணைந்துவிட்ட கரிந்த திரி.

—கீ. கு. இராசேந்திரன்.

பான்மை கூடாது, எல்லைக் கோடுகளிலே சிக்கிக் கொள்ளலாகாது, என்றெல்லாம் தீர்மானித்தான்.

உலகநாதன், சிறிதுநேரம் இருந்துவிட்டு, விடை பெற்றுக்கொண்டு, கிளம்பினான்.

சிந்தனையாளன், செந்தேன் உண்டவன்போலாகி அங்கேயே, உட்கார்ந்திருந்தான்.

திடீரென்று, பெருங் கூச்சல் கேட்டது.

ஒருவரை ஒருவர் ஏசிக்கொள்வதும், தாறுமாறாகப் பேசிக்கொள்வதும், கேட்டது.

உதைப்பேன்! கொன்றுவிடுவேன்! சுட்டுத்தள்ளுவேன்!—என்று கூக்குரல் கிளம்பிற்று.

பரபரப்பு ஏற்பட்டது; அமளி மூண்டுவிட்டது. மேஜைகள், நாற்காலிகள், பறந்தன, உடைந்தன. உண்டு களித்திருந்தோர், மூலைக்கு ஒருவராக ஓடலாயினர்.

பலப்பல நூற்றாண்டுகளாகப், பாவாணர்களும், அரசியல் ஆசிரியர்களும், எழுச்சியூட்டி நிலைநாட்டிய தேசியம் - நாட்டுப்பற்று—என்பதே போலித் தத்துவம், என்ற பேருண்மையை, உலகநாதனின் உன்னதமான விளக்கத்தால் பெற்று பெருமிதம் அடைந்திருக்கும் வேளையில், ஏதோ ஒரு அற்ப விஷயத்துக்காக, இங்கு அமளி செய்கிறார்களே, அறிவற்றவர்கள், பேருண்மையைக் கேட்டறியாப் பித்தர்கள், என்று எண்ணி வெறுப்படைந்தான், சிந்தனையாளன்.

இதற்குள், அமளி பலமாகிவிட்டது. ஒருவன் பலமாகத் தாக்கப்பட்டு, கீழே சாய்ந்தான். அவன் உடலில் பல இடங்களிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

“ஐயோ பாவம் எவனையோ, பலமாகத் தாக்கிவிட்டார்களே!'; என்று முணுமுணுத்தபடி, அந்த இடம் நோக்கிச் சென்றான், சிந்தனையாளன். அடிபட்டவனைக் கீழே கிடத்தி இருந்தார்கள். அருகே சென்று பார்த்தான், திடுக்கிட்டுப் போனான்; அடிபட்டுக் கீழே கிடந்தவன், உலகநாதன்.

“ஐயா! இவரை ஏன் இப்படித் தாக்கினீர்கள்? அமளிக்குக் காரணம் என்ன?” என்று பரிவுடன் சிந்தனையாளன், கேட்டான்.

“பயல், முன்கோபக்காரன். யாரோ ஒருவன், இவனுடைய ஊரிலே சாக்கடை நாற்றம் மூக்கைத் துளைக்கும் என்று சொன்னானாம். ஆஹா! என் ஊரைப் பற்றியா, கேவலமாக இழிவாகப் பேசுகிறாய்? என்று கூவி அவன்மீது பாய்ந்து அடித்தான்; தடுத்தார்கள், அடங்கவில்லை; பிறகு அனைவரும் சேர்ந்து, கொடுத்தார்கள். பலமாக; பயல் கீழே உருண்டான்; இவனுடைய ஊரிலே உள்ள சாக்கடை நாற்றமடிப்பதைச் சொன்னால்கூடவா, கோபம் வருவது! முட்டாள்தனமல்லவா அது!” என்று ஒருவர் விளக்கம் தந்தார்.

உலகநாதனைப் பார்த்தான்—அவன் தன்னிடம், தேசியமே போலி, என்று பேசிய பேச்சை நினைத்துக் கொண்டான்— அவன் ஊரைப் பற்றி யாரோ கேவலமாகப் பேசினது கேட்டு, இவ்வளவு ஆத்திரம் பிறந்ததே. இவனா, உலகமே என் நாடு! எனக்கு நாடு என்ற எல்லைக்கோடுமீது பற்றுக் கிடையாது என்று பேசிய, உலகநாதன்!!—என்று நினைத்தான் — மயக்கம் வந்தது சிந்தனையாளனுக்கு.

* * *

தம்பி! ஓ, ஹென்ரியின், சிறுகதையை கூடுமான வரையில், புரியவைக்க முயன்றிருக்கிறேன் அதற்கான வடிவம் அமைத்து — அவ்வளவுதான்—அந்த முழுச் சுவையைத் தர இயலவில்லை.

‘ஒரே உலகம்’ என்று பேசுபவர்களிடம் தமது நாடு தமது ஊர் என்ற உடன், எப்படிப்பட்ட ஆத்திர உணர்ச்சி ஏற்படும், என்பதைக் கதை வடிவாக்கிக் காட்டி, தத்துவம் பேசலாம் தாராளமாக, ஆனால் பற்று, பாசம், அதனால் வரும் எழுச்சி இவைகளைப் போக்கிக்கொள்ள முடியாது என்பதை, அழகாக விளக்கிவிட்டார், ஓ ஹென்ரி.

* * *

திராவிட நாடாவது, தமிழ்நாடாவது, இந்தியா ஒரே நாடு, இதிலே என்ன, என் நாடு, என் இனம், என்ற குறுகிய மனப்பான்மை, என்று பேசுகிறவர்களைக் கண்டால், தம்பி! ஓ ஹென்ரியின் கதையை நினைத்துக் கொள்.

* * *

நாம், திராவிடம் கேட்கும்போது, பாரதம்—ஒரே இந்தியா—என்றெல்லாம் உபதேசம் செய்கிறார்கள்—பலர் — மேதாவித்தனம் என்ற எண்ணத்தில். அவர்களே அவர்களின் மாநிலம், அதன் உரிமை, அதன் தொழில் வளம், என்ற பிரச்சினை வந்ததும், தாவிக் குதிக்கிறார்கள், தாறுமாறாகக்கூட நடந்து கொள்கிறார்கள்.

அசாமிலே, இன்னமும் அடங்கவில்லை அமளி.

பஞ்சாபிலே கிளர்ச்சி ஓயவில்லை.

மகாராஷ்டிரம் கிடைத்த பிறகுதான், பம்பாய், ஆமதாபாத் அமளி அடங்கிற்று.

‘நாக நாடு’ என்று தனி அந்தஸ்த்துத் தருகிறோம், ஆண்டொன்றுக்கு மூன்று கோடி ரூபாய் செலவுக்குத் தருகிறோம், இந்தியாவில் ஒரு பகுதி என்ற ஏற்பாட்டுக்காகிலும் இணங்குக, என்று முகவாய்க் கட்டையைப் பிடித்துக்கொண்டு, டில்லி கெஞ்சுகிறது, பார்க்கிறோம்.

இவர்களேதான், ‘திராவிடம்’ என்று நாம் பேசும்போது, செச்சே! என்ன பேதைமை! பாரத தேசம் என்று சொல்லுங்கள்!—என்று உபதேசம் பேசுகிறார்கள்—உணவு விடுதியிலே, கண்டோமே, உலகநாதன், அவனைப்போல.

* * *

நமக்கு வேண்டிய உரிமையின் அருமையை, மற்றவர்கள், புரிந்துகொள்வார்கள், அக்கறை காட்டுவார்கள், ஆதரவு அளிப்பார்கள் என்று எதிர்பார்ப்பதும் தவறுதானே!

நமக்குத்தானே, பிரச்சினை புரியமுடியும். நாம்தான், கேட்டுக்கொள்ள வேண்டும்,

இன்னொருவர் தயவெதற்கு?
இந்நாட்டில் வாழ்வதற்கு!

என்ற கேள்வியை!

அண்ணன்,

அண்ணாதுரை

தாயுள்ளம்

சிறுகதை!

கூனி கொடுக்காவிட்டாலும் அரச மரம் பெருமை வாய்ந்தது தான்; அதைக் கடவுள் தன்மையில் வணங்குவதால்! அழகாக அமைக்கப்பட்ட மேடை, அதன் மத்தியில் அரச மரமும் அதைத் தழுவி நிற்கும் வேப்பமரமும் இருக்கும் காட்சி ஒரு தனி அழகுதான்.

அந்த மேடையிலே பல பெண்கள் அரச மரத்தைச் சுற்றிக் கொண்டு இருந்தார்கள். மஞ்சள் திகழும் முகங்கள்! பக்தி தோய்ந்த பார்வைகள்! கூப்பிய கரங்கள்! சலசலக்கும் பல பட்டாடை உடுத்திய பாவைகள்! பழக்கங்கள், பூக்கள், பால் நிறைந்த கிண்ணங்கள், அத்தனையும் அரச மரக் கடவுளை மொய்த்தன!

பாலை பாம்பிற்கு ஊற்றினார்கள்; உண்மை பாம்பிற்கல்ல, கற்சிலையாக நிற்கும் பாம்பின் கடவுளுக்கு! பூக்களும், பழங்களும் கடவுளுக்கு காணிக்கையாக செலுத்தினார்கள். இந்தக் காட்சி ஒரு கண்காட்சி தான்! இத்தனையும் எதற்கு? தங்களுக்கு ஒரு குழந்தை இல்லையே என்பதற்காக!

அதோ அந்த மேடையின் கீழ், மறு பக்கத்தில் நிற்கும் சில பெண்களைப் பாருங்கள். ஒளி மங்கிய கன்னங்கள், எண்ணெய் காணா தலைகள், கந்தல் உடைகள்; இத்தனை ஏழ்மையிலும் அவர்களுடைய உலர்ந்த மார்பில் தவழ்கிறது குழந்தைகள்.

ஆண்டவனை வேண்டுபவர்களுக்கு குழந்தை இல்லை. உயிர் ஊசலாடும் அந்த ஏழ்மை நிலையிலுள்ள ஏழைகளின் கையிலே மற்றொரு உயிர்! ஏன்? இதுதான் கடவுளின் திருவிளையாடலா?

காற்றடித்தது. அரச மரத்தின் இலைகள் சலசலவென அசைந்தாடின. அந்தக் காட்சி இந்த மக்களைப் பார்த்து சிரிப்பதுபோல் இருந்தது!

கவலை தோய்ந்த முகத்துடன் நிற்கும் முத்தாயியின் கண்கள் எதையோ உற்றுக் கவனித்தன. கற்சிலை பாம்பின் மேல் கிண்ணம் கிண்ணமாக ஊற்றும் வழிந்தோடும் பாலைக் கண்டாள். தன் குழந்தையைக் கண்ணுற்றாள். எலும்புக் கூட்டின்மேல் போர்த்திய தோலுடன் திகழ்ந்தது.

கற்சிலையின்மேல் ஊற்றும் பால் முத்தாயியின் கண்களுக்குப் பாலாகத் தோன்றவில்லை. பசியால் துடிதுடிக்கும் பச்சிளங் குழந்தைகளைப் பிழிந்து எடுத்த குருதியாகத் தோன்றிற்று! அந்தப் பால், மண்ணில் ஒரு பலனுமில்லாமல் இரண்டறக் கலந்தது. அவர்களுக்கு கடவுள் தங்களின் காணிக்கையை ஏற்றுக் கொண்டார் என்ற மகிழ்ச்சி! முத்தாயியின் கூட்டத்திற்கு தங்கள் குழந்தைகளுக்குப் பால் இல்லையே என்ற உள்ளக் கிளர்ச்சி!

முத்தாயியின் உள்ளத்திலே எண்ண அலைகள் எழுச்சிப் பெற்றன. கல்லையும், மரத்தையும் கடவுளாகி வணங்கி தங்கள் செல்வத்தில் ஒரு பகுதியை அதற்குப் பயன்படுத்தும் பலர், தன் இனத்தில் பலர் மரணப் படுக்கையில் உள்ளத்தைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லையே! கல்லும் மரமும் செய்த பாக்கியம் அவர்களுக்குக் கிடை

— சுடர்ஒளி —

யாதா? கல்லிற்கும் மரத்திற்கும், நடக்கும் சக்தியும், பேசும் திறமையும் இருந்துவிட்டால் அவைகளும் தங்கள் இனத்தில் பலவற்றை, மக்களைப்போல் ஏழ்மை நிலையிலே சுழலவிடுமா?

குவா, குவா என்று தன் குழந்தையின் பசித் துடிப்பைக் கேட்டு முத்தாயியின் உயிர் துடித்தது!

அரசமரத்தைச் சுற்றி விட்டுச் செல்லும் பெண்களைப் பார்த்துப் பிச்சைக் கேட்டாள்.

"அம்மா, தாயே! நானும் குழந்தையும் பட்டினி! கத்துகிறது! ஏதாவது......!" என்று அவர்களைப் பார்த்துக் கையேந்தினாள்; முத்தாயி.

"போடி! பிச்சை கேட்பதற்கு இதுவா இடம்? போயேண்டி நாலு தெருவிற்கு! இவள் கெட்ட கேட்டிற்கு கையிலே குழந்தை! சீ! "வெட்கம் கெட்ட தடிக் கழுதைகள்! போடி தூர...!" என்று கூறினார்கள்; குழந்தை வரம் வேண்டியவர்கள்.

பிச்சை கேட்டதற்கு இத்தனை வசை மொழிகள். தேடி வந்துப் பிச்சைக் கேட்டதற்கு! எல்லாம் வல்ல கடவுளுக்குப் பாலும் பழமும்!

மாலை வேளை அரச மரத்தின் மேடையில் பிச்சைக்காரர்கள் கூடினார்கள். முத்தாயியும் வந்தாள். வானமே கூரை! மண்ணே படுக்கும் மெத்தை! திருஓடே செல்வம்! இதுதான் பிச்சைக்காரர்களின் உலகம்! எல்லாரும் உறங்கிவிட்டார்கள். ஆனால் முத்தாயி இன்னும் உறங்கவில்லை. தன் குழந்தையைப் பார்த்தாள். விண்மீன்களின் சிறிய ஒளியில் அதன் முகம் ஒளிர்ந்தது. மெல்ல குனிந்து அதன் இதழ்களிலே முத்தமிட்டாள்! அவள் முகத்திலே புன்னகை தவழ்ந்தது! தன் பார்வையை பக்கத்தில் திருப்பினாள். மலர்ந்த முகம் சுருங்கிற்று! கண்ணீர் கண்களிலிருந்து வழிந்தது. ஏன்? அவள் உள்ளம் எதைப் பற்றிச் சிந்திக்கிறது?

நிலவின் தண்ணொளியில், மொட்டை மாடியில் நின்று கொண்டு, வெள்ளிக் கிண்ணத்தில் பால் சோற்றை குழைத்து தன் குழந்தைக்கு ஊட்டும் அந்த தாயின் இனிய காட்சியும்......'

அன்று பூத்த மலர் மண்ணிலே உதிர்ந்து தவழ்வதைப் போன்று, ஆண்டு நிறைந்தக் குழந்தை, தாயின் மடியிலே தவழ்வதும், இசையை வெல்லும் அதன் மழலையும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அதன் தளர் நடையழகையும்...! ஆகிய இத்தனையும் கூடி, செல்வ நிலையில் தன் குழந்தை வளரவில்லையே என்று முத்தாயியின் உள்ளம் சிந்தித்து இருக்குமோ? அல்லது விடிந்தால் தன் குழந்தைக்கும் தனக்கும் உயிர் வாழ்வதற்கு உணவு கிடைக்குமா? என்பதைப் பற்றி சிந்தித்து இருப்பாளா?

தன்னைச் சூழ்ந்து இருக்கும் பிச்சைக்காரர்களைப் பார்த்தாள். சுடுகாடு நினைவிற்கு வந்தது! மக்கள் இறந்ததும் ஒதுக்கப்படும் இடம் சுடுகாடு அதைப் போன்று மக்களில் பலர் தன் இனத்தில்

சிலரை ஒதுக்குகிறார்கள்; பிணத்திற்கு சமமாக! அத்தனையும் நடமாடும் பிணங்கள்!

இருள் மலர்ந்தது. முத்தாயின் உள்ளம் மலரவில்லை! சுடலை ஆண்டிகள் எழுந்தார்கள். முத்தாயியும் எழுந்து நடந்தாள். இரண்டு வீதிகளையும் கடந்தாள்.

ஒரு வீதியின் முனையில் ஒரு குப்பைத் தொட்டி இருந்தது. அந்தக் குப்பைத் தொட்டியைச் சுற்றி மனித கூட்டம் மொய்த்திருந்தது. அவர்களுக்குப் போட்டியாக நாய்களும் அந்தத் தொட்டியை வட்டமிட்டன!

மனிதனுக்கும் மிருகத்திற்கும் போர்! எதற்காக? உணவிற்காக!

அந்தக் குப்பைத் தொட்டியின் எதிரே ஒரு சிற்றுண்டிச் சாலை. அதனுள்ளிருந்து தங்கள் பசியைப் போக்கிக்கொண்டு வெளியே பலர் வந்தார்கள். குப்பைத் தொட்டியினிடத்தே நடக்கும் போரைப் பார்த்து சுவைத்தார்கள்!

முத்தாயி இந்தக் காட்சியைக் கண்டாள். அவளிடம் உள்ளது ஆண் குழந்தை. மனிதனுக்கும் மிருகத்திற்கும் நடக்கும் போரில் ஆண் மகன்தான் இருந்தான். இந்த இடத்தில்கூட பெண்களுக்குப் போராட உரிமை கிடையாது! அதனால் எதிர்காலத்தில் தன் குழந்தை பிழைத்துவிடும் என்ற நம்பிக்கை அவளுக்கு உண்டாயிற்று.

எல்லாருக்கும் ஒரே வயிறு தானே! கடவுளும் ஒருவர்தானே! பசியும் எல்லாருக்கும் ஒரு நிலை தானே! இதில் ஏன் ஏற்றத் தாழ்வு?

முத்தாயிக்குப் புரியாத புதிராக இருந்தது இது!

ஆண்டு மலரில் ஆறு இதழ்கள் உதிர்ந்தன. எப்படியோ தன் குழந்தையை வளர்த்தாள். முத்தாயியின் பையன் ஓடியாடினான். அதைக் கண்டு அந்தத் தாயுள்ளம் துன்பத்தால் விரியும்: தன் குழந்தையைப் பார்க்க முடியாமல் தன் கணவன் இறந்து விட்டானே என்ற ஏக்கத்தால். விரிந்து பரந்துக் கிடக்கும் இந்த உலகில் வாழ முடியாமையால் வறுமையில் மாண்டான்; அவள் கணவன்.

நன்றாக உழைத்துவிட்டு, சோர்ந்த உள்ளத்தோடு முத்தாயியின் கணவன் பொன்னன் தன் இல்லத்தில் நுழையும்போது, முத்தாயி தன் குழந்தைக்குப் பால் கொடுக்கும் காட்சியையும், அப்போது அவள் முகத்தில் எழும் நாணப் புன்னகையையும் பார்த்து அவன் உள்ளம் மகிழ்ச்சியால் மலர, அதைக் கண்டு அவளால் இன்புற்று வாழ முடியவில்லை; இந்த உலகில்.

குழந்தை, முத்தாயியின் வயிற்றில் இருக்கும்போதே அவள் கணவன் இறந்துவிட்டான்.

நடுப்பகல்!

குப்பைத் தொட்டியைச் சுற்றி 'இந்நாட்டு மன்னர்கள்' கூடினார்கள்! அந்த வட்டாரத்திற்குப் பிச்சைக்காரர்களுக்கு உணவு அளிக்கும் கண் கண்ட கடவுள் அதே குப்பைத் தொட்டி! அந்தக் 'திருக்கூட்டத்தில்' முத்தாயியின் மகனும் ஒருவன்!

முத்தாயி தன் மகனுக்குப் பசியைப் போக்க வழி செய்து விட்டாள்! அவளால் முடிந்தது அந்த ஒரு வழிதான்; இன்றைய உலகில்! உணவைச் சேகரித்து பல உயிரையும் தன் மகனையும் காப்பாற்றும் அந்தக் குப்பைத் தொட்டியை மனதார வாழ்த்தினாள் முத்தாயி.

ஆடம்பரமாக உண்டு விட்டு! எஞ்சியதை எச்சில் செய்துப்போடுவதை எதிர் பார்த்திருக்கிறது அந்தக் கூட்டம்! எச்சில் தரும் வள்ளல்கள் ஏராளம்! எச்சிலை உண்ணும் பிச்சைக்காரர்கள் அவர்களில சிலர்! அதே இனம்! ஐயோ! இவர்கள் மனிதத் தன்மையோடு உண்ணவும், உறங்கவும், உடுத்தவும் முடியவில்லையே!

அதோ! முத்தாயி சாகக் கிடக்கிறாள். அவள் கண்களில் ஒளி கொஞ்சம் கொஞ்சமாக மறைகிறது.

நெற்றி வியர்வை நிலத்தில் வழிந்திட அவள் கணவன் உழைத்தான். நெற் கதிர்கள் பொன்மணிகளாக விளைந்து விட்டன. அதைக் கண்டு அவன் உவகை அடைகிறான். தன் உழைப்பை எண்ணி வியக்கிறான். மல்லிகை மலரென காட்சியளிக்கும் சோற்றைக் காண்கிறான். பசிக்கும் அவள் வயிறு அதைக் கண்டு மகிழ்கிறது. ஆனால் அந்தச் சோறு அவனுக்கு உரிமையாகவில்லை! வறுமையால் மாண்டான்...!

முத்தாயின் மங்கிய கண்களில் மறையும் ஒளியில் இத்தனையும் நிழலோவியமாக நின்று மறைந்தது. வர வர அவளுடைய கண்களில் ஒளி தோய்ந்தது.

அவள் உலகம் இருள ஆரம்பித்தது! மங்கிய ஒளியில் தன் பக்கத்தில் உள்ள மகனைக் கண்டாள்! அவனுடைய பிஞ்சு உள்ளத்தில் 'அம்மா, பசி' என்று எழும் குரலை அவள் தாயுள்ளம் உணர்ந்து அதற்குப் பதிலாக அவளுடைய இருளும் இரு கண்களின் முன்னே 'குப்பைத் தொட்டி' கடைசியாகத் தோன்றி மறைந்தது.

ஆசிரியருக்குக் கடிதம்:

அட்சன் போட்ட ஒரு துண்டு

★

ஐயா,

அறுபத்துஇரண்டு ஆண்டுகட்கு முன்பு வில்லியம் என்றி அட்சன் என்பவர் (ஆங்கிலேயர்) 'இலக்கியக் கல்விக்கு ஓர் அறிமுகம்' என்ற தலைப்பில் அருமையான நூலொன்று எழுதியுள்ளார். இந்நூல் இந்தியப் பல்கலைக் கழகங்களில் 'இலக்கியத் திறனாய்வு'ப் படிப்புக்குப் 'பைபிள்' போல் படிக்கப்படுகிறது. அந்நூலில் பக்கம்—285-இல் (1946-ஆம் ஆண்டுப் பதிப்பு) உள்ள ஒரு சொற்றொடர் நிலையின் தமிழாக்கம் வருமாறு:

"இக்கருத்து பெரிதும் மிகையழுத்தம் உடையது. இதில் இலக்கிய நுகர்ச்சியைக் கல்வி நோக்குடைய ஒரு திறனாய்வாளர் 'பார்ப்பன சாதி'க்கே உரிய ஒரு தொழிலைப் போலக் கருதும் போக்கில் நாற்றம் அடிக்கிறது."

அறுபது ஆண்டுகட்கு முன்பு ஆயிரமாயிரம் மைல்கட்கு அப்பாலிருந்த அட்சனுக்கும் தெரிந்திருக்கிறது......நெஞ்சில் ஒரு முள்ளாய் உறுத்தியிருக்கிறது .... இல்லாவிட்டால் உவமையில் வெளிப்படுமா உண்மை!

அன்புள்ள,
ந. சஞ்சீவி,
தமிழ்த்துறைத் தலைவர்.

பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன்; நில உச்சவரம்பு மோசடிக்கு காமராசரே காரணம்

கலைஞர் கருணாநிதி முழக்கம்!

அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட இந்தக் கழகம் அவருடைய தம்பிமார்களுடைய பேருழைப்பாலும், சலியாத பணியாலும், ஆர்வத்தாலும் அடக்குமுறைகளைத் தாங்கிக் கொள்ளுகிற தியாகத்தாலும் வளர்க்கப்பட்டு ஆட்சிபீடம் ஏறி, ஏறி விட்டோமே என்று அகந்தை கொள்ளாமல்—சமுதாயத்தின் அடித் தளத்தில் அமுக்கப்பட்டுக் கிடக்கிற ஏழை எளிய மக்கள்—பாட்டாளி மக்கள்—தொழிலாளித் தோழர்கள்—பாமரர்கள் — பட்டிக் காட்டில் வாழ்வோர்— இன்னோரன்ன சமுதாயத்தில் கீழ்மட்டத்தில் இருக்கின்ற மக்களுக்காக பாடுபடுவதைத் தன்னுடைய மைய நோக்கமாகக் கொண்டு பணியாற்றி வந்திருக்கிறது. இனியும் பணியாற்றும்.

இந்தக் கழகம் இவ்வளவு சீரும் சிறப்பும் பெற்றிருக்கிறதே—இந்தக் கழகத்தின் ஆட்சியை—நல்லோர் போற்றி நாட்டார் பாராட்டி வருகிறார்களே என்ற எரிச்சலின் காரணமாக எதிர்த்தரப்பிலிருந்து ஏதேதோ பேசப்படுகிற செய்திகளையெல்லாம் எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் எடுத்துச் சொல்லி அதற்குக் காரணம் என்ன என்பதை பேராசிரியர் அவர்களும் விளக்கியிருக்கிறார்கள்.

அண்ணா முதலமைச்சராக இருக்கலாமா? கருணாநிதி முதலமைச்சராக இருக்கலாமா? நாவலர் நெடுஞ்செழியனும், பேராசிரியர் அன்பழகனும், அன்பில் தர்மலிங்கமும்—இப்படிப்பட்ட சாதாரண மக்களுடைய பிரதிநிதிகள் — சாமான்யர்களுக்காக வாதிடுவோர் — போராடுவோர் — பணியாற்றுவோர் — காலமெல்லாம் அவர்களுடைய வாழ்வுக்காகவே தங்களுடைய வாழ்வினை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் — நாடாளுகிற இடத்தில் இருக்கலாமா? என்கிறஆத்திரமிகுதியில் தான்—

'பெருந்தலைவர்'கள் மதிப்பிற்குரியவர்கள் — மரியாதைக்குரிய இடங்களில் இருந்தவர்கள் — இன்று நாடு சுற்றி கழகத்தை இழித்தும் பழித்தும் பேசி வருகிறார்கள்.

நம்முடைய நண்பர் நாகசுந்தரம் பேசுகிற நேரத்தில் காமராஜர்—கழக ஆட்சியில் ஊழல் ஊழல் என்று பேசி வருகிறாரே அதை அவரால் காட்ட முடியுமா என்று கேட்டார்.



நான் அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு காமராசர் பாணியிலேயே பதில் சொல்ல விரும்புகிறேன்.

1967-க்கு முன்பு — காங்கிரஸ் கட்சி நாடாண்ட காலத்தில் — காங்கிரஸ் கட்சியிலே ஊழல் பெருகிவிட்டது என்று மூதறிஞர் ராஜாஜி அவர்களும்—சுதந்தராக் கட்சிக்காரர்களும் வேகமாகப் பிரச்சாரம் செய்தபோது — கா'மராஜர் எப்படிப் பதில் அளித்தார் தெரியுமா?

இன்று கழக அரசைப் பார்த்து லஞ்சம் ஊழல் இவைகள் தாண்டவமாடுகின்றன என்று காமராசர் குற்றம் சாட்டுகிற நேரத்தில் நாங்கள் யாரும் ஆத்திரப்படவில்லை

எங்கள் தகுதியென்ன நிலைமை என்ன என்றெல்லாம் நானோ, அமைச்சர் பெருமக்களோ, யாரும் பேசவில்லை. அகந்தையோடும் பதில் அளிக்கவில்லை.

லஞ்ச ஊழல் இருக்கக் கூடாதுதான். அது இருந்தால் ஆதாரத்தோடு காட்டுங்கள் தக்க நடவடிக்கை எடுக்கிறோம் என்றுதான் நாங்கள் அடக்கத்தோடு சொன்னோமே தவிர, லஞ்சத்திற்கோ ஊழலுக்கோ கழக அரசு என்றைக்கும் வக்காலத்து வாங்கிப் பேசவில்லை.

ஆனால், சுதந்திராக் கட்சி அன்று கேள்வி கேட்டபோது, காமராசர் பதில் அளித்து, அவருடைய பெயரால் வெளியிடப்பட்டிருக்கிற-அவருடைய படம் மேலட்டையில் அழகாகத் துலங்குகின்ற புத்தகத்தில் இருப்பதை மட்டும் நான் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

புத்தகத்தின் தலைப்பு: "காமராசர் உவமைகள்." காமராசருக்கும்-உவமைகளுக்கும் என்ன தொடர்பு என்று கேட்காதீர்கள்.

இந்தப் புத்தகம் வானதி பதிப்பகத்தினரால் 1965-ம் ஆண்டு வெளியிடப்பட்டிருக்கிறது.

நான் அந்தப் புத்தகம் விற்பனைக்கு விளம்பரம் செய்வதாக நண்பர்கள் வருந்த வேண்டாம். ஆனால், இப் புத்தகம் ஏராளமாய் விற்பனை ஆக வேண்டுமென்று விரும்புகிறேன்.

அப்போதுதான் லஞ்சத்திற்கும் ஊழலுக்கும் 1965-ம் ஆண்டு காம

ராசர் எந்த அளவு விளக்கம் தந்திருக்கிறார் என்பது நாட்டுக்குத் தெரியும். காங்கிரஸ் நண்பர்களுக்குப் புரியும்.

காமராசரே பேசுகிறார் கேளுங்கள். இது அப் புத்தகத்தின் 31-ம் பக்கத்தில் உள்ளது.

"சுதந்திராக் கட்சிக்காரர்கள் ஊழல் ஊழல் என்று பூச்சாண்டி காட்டுகிறார்கள்.

குழந்தைகளுக்குத் தாய் பூச்சாண்டி காட்டி மிரட்டுவதில்லையா அதைப் போல!

குழந்தைகள் அழுதால் பூச்சாண்டி வருவான் உன்னைத் தூக்கிக்கொண்டு போய்விடுவான் என்றெல்லாம் தாய்மார்கள் குழந்தைகளுக்குப் பயம் காட்டுவதுண்டு. திடீரென்று குழந்தை எங்கேயம்மா பூச்சாண்டி காட்டு பார்க்கலாம் என்று கேட்டுவிட்டால் விழிப்பார்கள். எங்கேயிருந்து பூச்சாண்டியைக் காட்டுவார்கள்-காட்ட முடியாதல்லவா அதைப்போலத்தான் ஊழல் எங்கேஎன்று கேட்டால் ஊழல் ஊழல் என்று கத்தும் பேர்வழிகள் அதைக் காட்ட முடியாமல் திகைக்கிறார்கள்!

காமராசர் 65-ம் ஆண்டு பேசிய இதை நான் அப்படியே அவருக்குத் திரும்பச் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

இன்னொன்றும் சொல்கிறார், "சாக்கடையில் ஊறிக் குளித்து..." என்ற தலைப்பில்.

"எங்கேயோ சாக்கடைக் குழியில் போய் உட்கார்ந்து கொண்டு நகர் முழுவதும் நாற்றம் நாற்றம் என்றால் நான் என்ன செய்வது? அதேபோல் ஊழலிலேயே ஊறிக் குளித்து மூழ்கிக்கொண்டிருப்பவர்கள், மற்றவர்களைப் பார்த்து ஊழல் என்றால் என்ன செய்வது?"— இதுதான் அவர் சொன்னது!

இப்படிச் சொன்ன காமராசர்தான் நம்மைப்பார்த்து ஊழல் ஊழல் என்று சொல்கிறார்.

அதே காமராசர் அப்படிச் சொல்கிறவர்களைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறார் என்பதைத்தான் மேலே படித்தேன்.

ஆக—

காமராசர் இன்றைய தினம் கழக அரசைப் பார்த்துச் சாட்டுகிற குற்றச்சாட்டுகளுக்கு அவரே பதில் அளித்திருக்கிறார்.

காமராசர் தஞ்சாவூரில், திருச்சியில், மாயவரத்தில் பேசுகிறார்.

கழக அரசை நான் ஏன் அழிக்க வேண்டும்? அவர்களுக்குள் 183 பேரும் ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டு அழிந்து ஒழிந்து போவார்கள் என்று சொல்லியிருக்கிறார்.

காமராசர் திருப்பணி!

இவர் ஏதோ நேருவுக்குப் பிறகு அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராகி அதை அப்படியே கட்டிப் பிடித்து ஒரே கட்சியாக வைத்திருப்பதைப் போல்—கழகத்தைப் பார்த்து ஒருவருக் கொருவர் அடித்துக்கொண்டு அழிந்து விடுவோம் என்று சாபமிடுகிறார்.

காமராசரை நம்பித்தான் நேரு கண்ணை மூடினார். நம்மைவிட இவர் இருக்கிறார் இவர் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியைக் கட்டிக் காத்து வைத்திருப்பார் என்று எண்ணிக்கொண்டு நேரு கண்களை மூடினார்.

அகில இந்தியக் காங்கிரஸ் தலைமைப் பொறுப்பு காமராசரிடம் ஒப்படைக்கப்பட்டது.

லால்பகதூர் சாஸ்திரி பிரதமர் ஆனார். பிறகு இந்திரா காந்தியைப் பிரதமர் ஆக்கினார்; பிறகு காமராசர் காங்கிரசை இரண்டாக ஆக்கினார்.

சஞ்சிவ ரெட்டி நாடாளுமன்றத்தில் சபாநாயகர் நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அங்கேயிருந்து அவரைஇழுத்து ஊருக்கே போக வைத்தார்.

மொரார்ஜி தேசாயைப் பிரதமருக்கு அடுத்த இடத்தில் அமர்ந்து நிதியமைச்சர் பொறுப்பை ஏற்கச் செய்தார்.

பிறகு அவரையும் கெடுத்து ஒழித்தார்.

ராம் சுபாக் சிங் மத்திய ரயில்வே அமைச்சராக வீற்றிருந்தார். அவரைத் தண்டவாளத்தில் படுக்க வைத்தார்.

தாரகேசுவரி சின்காவை தோற்கடித்தார்.

இவ்வளவும் செய்த காமராசர் புண்ணியவான் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் நிஜலிங்கப்பாவையும் மைசூருக்குப் போக வைத்தார்.

இப்படியெல்லாம் செய்த இந்த மகாப் புண்ணியவான், யார் யார் பதவி இழந்தார்களோ. பவிசு இழந்தார்களோ அவர்களையெல்லாம் விட்டு விட்டு நம்பியவர்களை

நட்டாற்றில் விட்டு விட்டு—நான் போகிறேன் இந்திரா காங்கிரசுக்கு என்று நேரம் கணித்துக் கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட இவரா—

கழகத்தைப் பார்த்து ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டு அழிந்து விடுவோம் என்று ஆருடம் கணிப்பது?

நாங்கள் காமராசரை விட வயதில் சிறியவர்கள்; அனுபவத்தில் குறைந்தவர்கள். போனால் போகிறது—அறிவில் தாழ்ந்தவர்கள்.

அப்படிப்பட்ட நாங்கள் அவர்கள் கட்சி இரண்டாக உடைந்த போது என்ன சொன்னோம்.

மெத்த வருத்தப்படுகிறோம் என்றுதான் குறிப்பிட்டோம்.

இந்தியாவில் அகில இந்திய ரீதியில் உயர்ந்த பெரிய கட்சி இப்படி இரண்டாக உடைவது நல்லதல்ல.

ஆகவே அவர்கள் மீண்டும் சேருவார்களேயானால், நான் சந்தோஷப் படுவேன் என்றுதான் அவர்கள் இரண்டாக உடைந்து போன பின்னும், நான் சொன்னேன்.

ஆனால் காமராசர் தமிழ் நாட்டில் இன்றையதினம் வளர்ந்

தோங்கியிருக்கிற ஜனநாயக ரீதியிலுள்ள ஒரு கட்சியைப் பார்த்து "இது இரண்டாக உடையாதா? ஆடுகள் முட்டிக் கொள்ளாதா—நாம் போய் ரத்தம் நக்கிக் குடிக்கும் நரியாக இருக்கமாட்டோமா?' என்ற அளவில் துடிக்கிறார்.

பெரும் தலைவர்—பொறுப்பான இடத்தில் இருந்தவர் தி. மு. க. வை தீர்த்துக் கட்டத்தான் சுற்றுப் பயணம் செய்கிறேன். அவர்கள் ஆட்சியில் ஏற்பட்டுவிட்ட கொடுமைகளை களையத்தான் சுற்றுப் பயணம் செய்கிறேன் என்கிறார்.

"சுற்றுப் பயணம் செய்யும் என்னைப் போய், ஏன் மைசூருக்குப் போகவில்லை; மத்தியப் பிரதேசத்துக்குப்போகவில்லை? ராஜஸ்தானுக்குப் போகவில்லை என்றெல்லாம் இந்தக் கருணாநிதி பேசுகிறாரே—என் நான் போகவேண்டும்? எனக்கு வேலை இங்கே அல்லவா இருக்கிறது?"—என்று காமராசர் பேசுகிறார்.

நான் ஒப்புக்கொள்கிறேன். இதுவரையில் காமராசரை அகில இந்தியத் தலைவராக எண்ணிக் கொண்டிருந்தேன். இப்போது அவரே பதில் அளித்துவிட்டார் "நான் அகில இந்தியத் தலைவன் அல்ல; தமிழ் நாட்டில் மாத்திரம் தான் தலைவன். அதிலும் தி. மு. க.வை ஒழிப்பது மாத்திரம் தான் என் குறிக்கோள்." என்ற அளவுக்கு இன்று அவர் பதில் அளித்திருக்கிறார்,

நான் மெத்தவும் வருத்தப்படுகிறேன்.

மைசூரில் ம. பி. யில், பீகாரில், ராஜஸ்தானில், தேர்தல் நடைபெறுகிறது. அங்கெல்லாம் காமராசர் வரமாட்டாரா? நாலு வார்த்தை பேச மாட்டாரா? பேசினால் நாலாயிரம் வாக்குகள் விழுமே—என்றெல்லாம் எண்ணி ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நான் சொல்கிறேன்; காமராசருக்கு, கழகத்தை மார்ச் 11-க்குப் பிறகு ஒழித்துக் கட்டக் கூடாதா அதற்குள்ளாக நான் முதல் தேதி பட்ஜட் தாக்கல் செய்யவேண்டும். அதுவரை விட்டு வையுங்களேன்; அதுவரை மைசூருக்குச் சென்று வீரேந்திரப்பட்டீல் காங்கிரசாருக்கு உதவி செய்து உங்களுடைய பிரச்சார சுற்றுப் பயணத்தைச் செய்து விட்டு 11-ம் தேதிக்குப் பிறகு இங்கே கூட்டம் போட்டு கழகத்தை ஒழித்துக்கட்டக் கூடாதா?

"அங்கே எவன் என்னை அழைத்தான்?" என்ற கோபம் இருக்கலாம்; அல்லது "நான் அங்கே போனால் பிறகு இந்திரா காந்தியார் என்னைச் சேர்த்துக் கொள்வார்களா? என்பதாகவும் இருக்கலாம்.

ஆனால் இந்த இரண்டையும் மறைத்து விட்டு கழகத்தை ஒழிக்கவே வேலை செய்கிறேன் என்று காமராசர் பேசுவது எனக்கு விந்தையிலும் விந்தையாக இருக்கிறது.

தஞ்சையில் பேசியிருக்கிறார். "முன்னேற்றக் கழக ஆட்சியில் ஊழல், அதை ஒழிக்க வேண்டாமா?" என்று யாருடைய தலைமையில் பேசியிருக்கிறார்தெரியுமா?

பெரிய மிட்டாதார் மூப்பனார் தலைமையில்!

தஞ்சை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் கருப்பையா மூப்பனார் தலைமையில் பேசியிருக்கிறார்.

1960-ல் காங்கிரஸ் கட்சி சட்டமன்றத்தில் வீற்றிருந்தபோது நில உச்சவரம்புச் சட்டம் என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதனபடி முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் ஒரு குடும்பம் வைத்திருக்கலாம். மிச்ச நிலத்தை யெல்லாம் அரசாங்கம் எடுத்து விவசாயத் தொழிலாளர்களுக்குப் பிரித்துக் கொடுக்கும். இதுதான் அந்த உச்சவரம்புச் சட்டத்தின் புனித மான குறிக்கோள்.

ஆனால், 60-ம் ஆண்டுச் சட்டம் வருவதற்கு முன்பே 1959-ம் ஆணடிலேயே இப்படிப்பட்ட சட்டம் வரப் போகிறது என்கிற சேதி நாட்டில் அறிவிக்கப்பட்டு விட்டது.

6—4—60 அன்று சட்டம் வருகிறது; அப்போது கருப்பையா மூப்பனாரின் நிலத்தின் அளவு 2028 ஏக்கர். அதில் 1464 ஏக்கரை அவர் விற்றுவிடுகிறார். ஏன்?

திருமணச் செலவிற்காகவா? காதுகுத்து விழாவுக்கா? வீட்டில் ஏற்பட்ட நல்லது கெட்டதற்கா? அல்ல; அல்ல. 1464 ஏகரை யாரோ ஒரு பெரிய மிராசுதார் வாங்கிக் கொண்டாரா? இல்லை.

வாங்கிக் கொண்டவர்கள் எல்லாம் 30 ஸ்டாண்டர்டு ஏகருக்கு மேல் போகாமல் வாங்கிக் கொண்டுள்ளார்கள் பலர்.

இது 59-ல்!

பிறகு அதுபோக 389 ஏக்கர் தரிசு நிலங்கள் ஆகிறது. 125-ஏக்சர் அறக் கட்டளை ஆகிறது. மிச்சம் அவரிடம் உபரியாக உச்சவரம்புச் சட்டத்தின்படி அரசுக்குக் கிடைத்தது 4 ஏக்கர் 84-சென்ட்.

காமராசரே! இதற்குப் பெயர் ஊழலா? அல்லவா (ஊழல் ஊழல் என்று பொது மக்கள் குரல்) 60-ஆம் ஆண்டு சட்டம் வரப் போகிறது என்று தெரிந்த தஞ்சை மாவட்டக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் காப்பாளர், காவலர், தூண், காமராசரின் வலக்கரம். கபிஸ்தலம் மூப்பனார் தம்முடைய 2000 ஏக்கரில் மிச்சம் 34 ஏக்கரை வைத்துக் கொண்டு நாலு ஏக்கர் உபரி என்றால் நடந்தது என்ன?

அதை அடுத்து காங்கிரஸ் கட்சியின் தூண் — பெரிய செல்வக் குடும்பம் பூண்டி வாண்டையார் குடும்பம்.

குடும்பத்தின் தலைவர் வீரையா வாண்டையார். நிலம் 467 ஏக்கர்.

60-ஆம் ஆண்டு சட்டம் வருகிறது. 59 ஆண்டு கடைசியில் 467 ஏக்கரில் 295 ஏக்கரை விற்கிறார்......

134 ஏக்கரை பாகம் செய்து கொள்கிறார்.

அவருக்கு அடுத்தவர் வி. அப்பாவு வாண்டையார். அவருக்குரிய 385 ஏக்கரில் 307 ஏக்கரை விற்கிறார்.

அடுத்தவர் அப்பாசாமி வாண்டையார். அவருடைய 625 ஏக்கரில் 552 ஏக்கரை விற்கிறார்.

அவருக்கு அடுத்து வீரையா வாண்டையார் (ஜூனியர்) அவருக்குள்ள 298 ஏக்கரில் 197 ஏக்கரை விற்கிறார்.

அடுத்து கிருஷ்ணசாமி வாண்டையார் (ஜூனியர்) 498 ஏக்கர். 498 ஏக்கரில் 468 ஏக்கரை சட்டம் வருவதற்கு முன்னுல் (4 மாதங்களுக்கு முன்பு) விற்கிருர்.

ஐயாவு வாண்டையார் 699 ஏக்கரில் 629 ஏக்கரை விற்கிருர்.

துளசியையா வாண்டையார் 446 ஏக்கரில் 256 ஏக்கரை விற்று விடுகிருர். 100 ஏக்கரைப் பாகம் செய்கிருர்.

ஆக, இந்த வாண்டையார் குடும்பத்திற்கு 1959-ஆம் வருஷக் கடைசியில் இருந்த நிலம் 4000 (நாலாயிரம்) ஏக்கர். ஆனுல், அரசாங்கத்திற்குச் சட்டப்படி கிடைத்தது வெறும் 48 (நாற்பத்தெட்டு) ஏக்கர்தான்!

காமராசரே இந்த ஊழலுக்கு நீங்கள்தான் காரணம் என்று நான் பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன்.

முன்கூட்டியே அந்த நிலப் பிரபுக்கள் எச்சரிக்கை செய்யப்பட்டு, சட்டத்திலிருந்து அவர்கள் காப்பாற்றப்பட்டிருக்கிருர்கள்.

இவ்வளவு பெரிய ஊழலின் அதிபதிகள்—லஞ்சாவதாரங்கள் அவர்கள். அவர்கள்தான் கழக அரசைப் பார்த்து ஊழல்-லஞ்சம் என்றெல்லாம் பொய் பேசுகிருர்கள். வேண்டுமென்றே அவதூருன பிரச்சாரத்தில் ஈடுபடுகிருர்கள் என்ருல் இவர்களுக்குப் பெயர் என்ன?

வரி உயர்ந்தது எப்படி?

பண மெல்லாம் மந்திரிகளின் பாக்கெட்டுக்கு போகிறதா என்று அவர் கேட்க, கூட்டத்திலிருந்த ஒரு சிறுவன், ஆமாம், இன்னுருடைய பாக்கெட்டுக்குப் போகிறது என்று பதில் சொல்ல, உடனே காமராசர்—அதை நான் சொல்லக்கூடாது நீ சொல்லு என்று சொல்லியிருக்கிருர்.

பத்திரிகையில் இன்னுருடைய பாக்கெட் என்று சொன்னதைப் போடவில்லை. போட்டிருந்தால் மறுநாள் கோர்ட்டுக்கு வரவேண்டும்.

இருநூறுகோடி ரூபாய்க்கு வரி போடுகிறோம் என்கிருர். கழகஅரசு உதயமான பிறகு தாங்க முடியாத ஏழை எளிய மக்களுக்கு நாங்கள் வரி போட்டிருக்கிறோமா? தாங்கக் கூடியவர்களுக்குத்தான் வரிபோட்டிருக்கிறோம். அதுவும் 200கோடி ரூபாய்க்கு அல்ல.

1956-57-இல் இந்த மாநில வருவாய் என்ன? இன்று கழக ஆட்சியின் வருவாய் என்ன? படிப்படியாக ஏறியிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

1956-57-இல் ஐம்பத்தாறு கோடி ரூபாய் வருவாய்க் கணக்கு.

1961-62-இல் தொண்ணூற்றிரண்டு கோடி ரூபாய்.

1966–67-இல் காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது 194 [illegible] ரூபாய். அது இன்று 3[illegible] கோடியாக இந்த ஐந்து ஆண்டில் ஆகியிருக்கிறது.

சதவிகிதத்தில் பார்த்தால் 1966—67 வரை காங்கிரஸ் ஆட்சியில் ஏறியிருப்பது 120 சதவிகிதம்.

கழக ஆட்சியில் 1966—67-ல் இருந்து 1971—72வரை ஏறியிருப்பது 69 சதவிகிதம்.

இன்று நாம் வரி போடாமல் அதிக வருமானத்தைப் பெறுகிறோமென்ருல் ஏற்கனவே போடப்பட்டவரிகள், அவை கொடுக்கிற இனங்கள் பெருகியிருக்கின்றன.

போடப்பட்ட வரிகள், உற்பத்தி பெருகிய காரணத்தால் வருமானம் மிகுதியாக வருகிறது. மேலும், வரிகள் ஒழுங்காக வசூலிக்கப்பட்டது. ஆகவே, வரி தாங்கக் கூடியவர்களுக்குத்தான் போடப்பட்டதே தவிர, தாங்க முடியாத யாருக்கும் கழக அரசு வரி போட்டு வாட்டவில்லை.

ஏழை எளிய மக்களுக்கு எந்த நல்ல காரியத்தையும் இந்த அரசு செய்யவில்லையா?

பணம் எங்கே போயிற்று. பணம் எங்கே போயிற்று என்கிருர், காமராசர். கலைவாணர் என். எஸ். கே. ஒரு சினிமாவில் “எங்கே தேடுவேன் பணத்தை” என்று பாடுவார். இன்று காமராசர் அந்தப் பாட்டை மேடைக்கு மேடை பாடிக் காட்டுகிருர்.

நாம் திட்டங்கள் ஒன்றும் நிறைவேற்றவில்லையா?

கழக அரசில் சாலைகள் அமைக்கப்படவில்லையா?

அணைக்கட்டுகள் கட்டப்படவில்லையா?

தொழிற்சாலைகள் திறக்கப்படவில்லையா?

கல்லூரிகள் தொடங்கப்படவில்லையா?

மருத்துவ மனைக் கட்டிடங்கள் கட்டப்படவில்லையா?

சுகாதாரம் கவனிக்கப்படவில்லையா?

குடிசைகள் கோபுரமாக மாறவில்லையா?

ஏழை எளிய மக்களுக்கு பட்டாக்கள் வழங்கப்படவில்லையா?

இந்தத் திருச்சி மாவட்ட கணக்கை மாத்திரம் பாருங்கள். 1960—61-ம் ஆண்டில் வழங்கப்பட்ட நிலப்பட்டா 1273.

வீட்டு மனைப் பட்டா 145.

1966—67-ல் நிலப் பட்டா 2000 பேருக்கு — வீட்டு மனைப் பட்டா 1039.

1970—71-ல் 13,247 பேருக்கு நிலப் பட்டா.

வீட்டு மனைப் பட்டா 12065.

இவையெல்லாம் ஏழைக்குச் செய்த நன்மைகள் அல்லவா?

இந்த நன்மைகளை மேலும் தொடர்ந்து செய்யத்தான் மாநில சுயாட்சி கேட்கிறோம். அதை இந்திரா காந்தி அவர்களும் தருவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

அந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் பணியாற்ற வேண்டும். வேகமாகப் பணியாற்ற வேண்டும். மிக விருவிருப்போடு பணியாற்ற வேண்டும். ஆர்வத்தோடு பணியாற்ற வேண்டும். அமைதியோடு பணியாற்ற வேண்டும். கட்டுப்பாட்டோடு பணியாற்ற வேண்டும். அண்ணு வழியில் நின்று பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

—திருச்சிக் கூட்டத்தில்.

அச்சிட்டு வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-2